225

கதிர்

0-, 6a
N47
77346.

ஜூபிடர்ஸ்

ராஜகுமாரி

(கற்பனைச் சித்திரம்)



டைரக்ஷன்:
A.S.A. சாமி. B.A.(HONS)

பாட்டு:
நாராயணகவி



நக்ஷத்திரங்கள்: K. மாலதி · K. தவமணிதேவி · M.S. பாக்கியம் · T.S. பாலையா···
M.G. ராமச்சந்திரன் · M.R. சுவாமிநாதன் · M.N. நம்பியார் · புளிமூட்டை · M.E. மாதவன்

★

வினியோக உரிமை விவரங்களுக்கு:

ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட், மதராஸ்

கதிர்

ஏழாம் புத்தகம்

பதிப்பாசிரியர் :

V. நூர்முகம்மது.

★

விலை அணா 8 மலாயாவில் காசு 60

நஜ்மா பதிப்பகம்

கிளை: 59, பிராட்வே-சென்னை 1

அறிவிப்பு!

நமது நஜ்மா பதிப்பகத்தின் பங்குதாரரும், மானேஜருமாயிருந்த ஜனுப் A. M. கரீம் அவர்கள் பல சொந்த வேலைகள் நிமித்தம் தமது பங்குப் பொறுப்பையும் மானேஜர் பொறுப்பையும் நீக்கிக்கொண்டார்கள் என்பதை இதன் மூலம் அன்பர்கட்கு அறிவிக்கிறோம்.

உரிமையாளர்,

நஜ்மா பதிப்பகம்,

புதுக்கோட்டை.

பொருளடக்கம் பக்கம்

1. நம்பிக்கை உதயம் 5
M. அப்துல் வஹாப், M.A., B.Th., (அலிகர்)

2. எதிர்காலத்தில் இருந்தேன் 9
ஷாயர்

3. புல்லாங் குழல் 15
மகுதூம்

4. படிப்பினை 19
நஜ்மா

5. எது வேண்டும் 21
K. P. முகம்மது தாவூத்

6. மாற்ருரும் போற்றுகிருர் 23
K. மஸ்ஊத் அஹமது

7. வாள் முறியாது 28
எம். கே. ஈ. மௌலானு

8. அவன் எங்கே 36
செழியன்

9. காரணம் 43
V. N.

10. இடிந்த கோட்டை 45
நூர்

11. குஷ்ட ரோகி 51
ரசூல்

12. அப்பக்காரி 58
S. M. A.

13. ஏழையர் உள்ளம் குளிரும் 62
V. நூர்முகம்மது

என் உரை

கதிர் ஏழாம் புத்தகம் மிகவும் தாமதித்து வெளிவருவதற்குத் தவிர்க்கமுடியாத காரணங்கள் பல இருந்தபோதிலும் வாசகர்களிடம் மன்னிப்புக் கோராதிருக்கமுடியாது.

இக்கதிரில் :

அல்லாமா இக்பாலின் 'நம்பிக்கையின் கதிர்' வழக்கம் போல் அன்பர் வஹ்ஹாப் அவர்களின் அழகிய தமிழில் இடம் பெற்றுள்ளது.

'படிப்பிணை' என்ற 'நஜ்மா'வின் உருவகம்—பஞ்சாப்பில் மாலிக் கிஸர் ஹயாத்கான் திவானாவின் ஆட்சிமுறையை எதிர்த்து மாகாண முஸ்லிம் லீக் நடத்திய நியாயப் போராட்டத்தின் வெற்றியை மட்டும் எடுத்துக் காட்டுவது.

'வாள் முறியாது'—என்ற கட்டுரை மன்னர் பகதூர் ஷாவின் சபதத்தை ஞாபகமூட்டுவது.

அவன் எங்கே? என்ற கட்டுரை இந்து தேசச் சரித்திரத்தில் கஷ்டப்பட்டு மறைந்துள்ள துரோகி அமீன் சந்தை அம்பலத்திற்கு இழுத்து விடுகிறது.

'எது வேண்டும்?' சொற்சுவையும் கருத்துச் செறிவும் கொண்ட கவிதை.

'இடிந்த கோட்டை' 'குஷ்டரோகி' 'அப்பக்காரி' ஆகிய மூன்றும் வாழ்க்கைச் சித்திரங்கள்.

'ஏழையர் உள்ளம் குளிரும்' நிதி மசோதா சம்பந்தப்பட்ட அரசியல் கட்டுரை.

ஷாயரின் கட்டுரை எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து இன்றே விழிப்படையுங்கள் எனத் தூண்டுகிறது.

V. நூர்முகம்மது,
பதிப்பாசிரியர்.

உர்து இலக்கியம் — அல்லாமா இக்பால்

நம்பிக்கை உதயம்

M. அப்துல் வஹாப், M.A., B.Th., (அலிகர்)

★

[இது அல்லாமா எழுதிய ‘நம்பிக்கையின் கதிர்’ (ஷுஆஏ உம்மீத்) என்னும் சிறு கவிதையின் தமிழாக்கம். இக்பாலின் நாட்டுப் பற்றிற்கு இச்சிறு பாட்டு ஓர் எடுத்துக்காட்டு. மேல் நாட்டு ஆதிக்கத்தின் அஸ்தமனம் நெருங்குகிறது; இனி கீழ் நாடுதான் உலகம் உய்ய உழைத்தல் வேண்டும் என்ற கவிஞர் கருத்து இங்கே வலியுறுத்தப் படுகிறது: அப்துல் வஹாப்.]

OFFICE OF THE ... MADRAS

ஆதவன் தன் கதிர்களை நோக்கிக் கூறினன்: “உலகமே ஒரு அதிசயப் பொருள். ஒளி தரும் காலை நேரமும், இருண்டு வரும் மாலை நேரமும் மாறி மாறிக் காட்சி அளிக்கின்றன அங்கு. நீங்களும் எவ்வளவு காலமாக இப் பரந்த வெளிகளிலே அலைந்து திரிந்துகொண்டிருக்கிறீர்கள். ஆனல் நீங்கள் அங்கிருந்து திரும்பியதும், இருள் சூழ்ந்து கொள்கிறது. சூரிய ஒளி இல்லாத இருண்ட நாட்கள் அந்த உலகில் நீண்டுகொண்டே செல்கின்றன. அவ்வுலகத்தின் ஒவ்வொரு அணுவையும் ஊடுருவிச் செல்கிறீர்கள்; ஒவ்வொரு பொருளின் மேலும் பிரகாசிக்கிறீர்கள். ‘மெல்லிய பூங்காற்று’ மலர்களையும் மொக்குகளையும் சுற்றிச் சுற்றி வந்து மணத்தை முகர்ந்து அனுபவிக்கிறது. நீங்களும் உலகைச் சுற்றிச் சுற்றி வந்து ஒளியைத் தந்துவிட்டு ஓடுகிறீர்கள். கண்டதென்ன? இருளோடு இருப்பதுதான்

இவ்வுலகிற்கு இன்பம் போலும்! எவ்வளவோ அருளொளி வீசியும், அதன் அக இருள் அழியவில்லையே. போதும் திரும்பிவிடுங்கள். இம்மாந்தர் வாழும் மாநிலத்தையும், நறுமலர் கொண்ட நந்தவனத்தையும், தருக்கள் நிறைந்த கானகத்தையும் விட்டுத் திரும்பிவிடுங்கள். ஒளி வீசும் என் உள்ளத்திலே மறுபடியும் வந்து அடங்கிக் கொள்ளுங்கள். போதும் இந்த ஓய்வற்ற ஓட்டமும், பயனற்ற உழைப்பும்.''

கதிர்கள் கூறின: புவியின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் நாங்கள் எழுகிறோம். நாள் முழுவதும் பிரிவு எங்களை வாட்டுகிறது. கடமையைக் கழித்த உடன், பிரிவாற்றாமை தாங்காது தவிக்கும் கதிரவனின் கருணை உள்ளத்திலே மறுபடியும் கலந்து களிக்கிறோம்.

எங்களை வாழ்த்திவந்த உலகம் இப்பொழுது வசை மொழி தருகிறது. குறிப்பாக மேலை நாட்டிலிருந்து ஒரே கூச்சல். 'நாங்கள் அங்கு செல்வதே இல்லை. எங்கள் ஒளியே அங்கு காணமுடியவில்லை' என்ற கதறல் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. மேலை நாடு ஒளி இழந்து இருப்பது உண்மையே. ஆனால் அது எங்கள் தவறா? ஐரோப்பிய நாட்டு 'மெஷின்கள்' கக்கும் கரிப்புகைதான் கங்குல்போன்று அந்நாட்டை கப்பிக்கொள்கிறதே! மனிதர்களை மிருகங்களாக்கும்—பெண்களை பேய்களாக்கும்—அவர்கள் ஆலைகளிலிருந்து கிளம்பும் புகையும், புழுதியும் பிரேதத்தைச் சுற்றிய ஆடை போன்றல்லவா அங்கு படர்ந்து கிடக்கிறது. கீழ் நாடுகள்கூட இப்பொழுது புகைய ஆரம்பித்துவிட்டனவே. இவ்வளவு இருளைக் கிழித்து எங்கள் ஒளி எங்கே இலங்கப்போகிறது? ஏனோ! இன்னும் 'அறிவோனின்' அருள் சுரக்கக் காணோம்.

எங்களை மறுபடியும் உன் இதய ஒளியில் ஒளித்து வைத்துக்கொள்! இந்தப் புகையை எங்கள் ஒளி எங்கே ஒழிக்கப்போகிறது. வெய்யோனே! இந்த வெளியிலே நிறுத்தி எங்களை வெதும்ப வைக்காதே. ஒளிப்பிழம்பே! இதோ ஓடி உன்னை அடைய வருகிறோம்.''

ஆனால் ஒரு கதிர் மாத்திரம் ஒதுங்கி நிற்கிறது. மின்னென வீசுகிறது அதன் ஒளி. தேவகன்னிகையின் கயற்கண் போன்று பொலிவுடன் திகழ்கிறது. சிதறுண்ட மாணிக்கங்கள் போன்று இலங்குகிறது அதன் ஒளி. ஏனோ அது மாத்திரம் தனித்து நின்று தத்தளிக்கிறது? துயரத்தால் துன்புறுகிறது. அமைதியற்ற அக்கதிர் கலங்கிய உள்ளத்தோடு நின்று கதறுகிறது.

சூரியனிடத்தில் முறையிடுகிறது அக்கதிர் ''எனக்கு மாத்திரம், இனியும் ஒளியைப் பரப்புவதற்கு அனுமதிவேண்டும். இருள் இருந்தாலும், இறந்தாலும், நான் இலங்கத்தான் வேண்டும். கீழ் நாட்டின் ஒவ்வொரு அணுவும் உணர்ச்சியால்—புரட்சியால்—துடிக்கும் வரை—துள்ளும் வரை நான் பிரகாசிக்கத்தான் வேண்டும். எது வரினும், இந்தியாவின் இருள் வெளியைவிட்டு நான் விலகமுடியாது. என் உழைப்பெல்லாம் இங்குதான் தேவை. துயிலில் துஞ்சும் இவர்கள் கனவு கலையும் வரை, என் கதிரொளிக்கு இங்கு வேலை இருக்கிறது. இவர்கள் கனவைக் கலைத்து, அகஇருளைத் தொலைத்துத்தான் நான் செல்லவேண்டும். கனவிலே மாத்திரம், இவர்கள் காணும் சுகத்தை, நனவிலேயும் இவர்களுக்கு ஈயவேண்டும்.

கீழ் நாட்டின் வருங்கால வாழ்க்கைக்கே—வளத்திற்கே—வழி கோலுவது இந்நாடு. கீழ்நாட்டு இலட்சியங்

OFFICE OF THE REGISTRAR OF

களின் கேந்திரம் இந்நாடு. கீழ் நாட்டு அபிலாஷைகளை யெல்லாம் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது இந்நாடு. இக்பாலின் கண்ணீர்த்திவலைகளைத் தாங்கி, தேங்கி நிற்பது இந்நாடு.

இந்நாடு தூக்கி எறியும் ஓடுகள்கூட முத்தென நத்தப் பட்டன. அறிஞர்களையும், கலைஞர்களையும் பெற்று, பெருமைப் படுத்தியது இப் பொன்னாடு. இந்நாட்டு அறிஞர்களின் கருத்தாழத்தின் முன்னே, அலை மோதும் கடல்கூட தேங்கிக் கிடக்கும் கேணியாகவே தென்படும். உலக மக்களின் உள்ளத்திலேயே உணர்ச்சி ஊட்டியது இந்நாட்டுக் கலை. எண்ணற்ற மக்களின் இதயத்திலே இன்பம் தந்தது இந்நன்னாட்டு இன்னிசை. இன்று இசையின்றி, இன்பமின்றி, இன்னலில் இடருறுகிறது இந்நாடு.

எங்குமே அசதியின், அசக்தியின் அமைதி. உரிய கருமங்களைச் செய்யத்தவறிய, பிருமணன் கோவிற்படியிலே கிடந்து குறட்டைவிடுகிறான். 'தக்தீர்' (விதி) என்று முஸ்லிமும் தலையிலடித்துக் கொள்கிறான். பள்ளி வாயில் "மிஹ்ருபின்" கீழ் நின்றுகொண்டு பரதவிக்கிறான், பல மற்றுப் பஞ்சையாய்ப் போய்விட்டோமே என்று.

இந் நிலையில் நாம் கீழ் நாட்டிலிருந்தோ மேல் நாட்டிலிருந்தோ திரும்பவேண்டாம். உலகம் இருளுகிறதே என்று ஓட வேண்டாம். 'இருளை ஒளியாக்கு, இரவைப் பகலாக்கு' என்று இயற்கையே அழைக்கிறது நம்மை.

ஜனுப் பிரோஸ்கான் நூன்.

Courtesy of "Deccan Times" Madras.

இஸ்லாமியன் என்ற உணர்ச்சி
மிதவாதியாகிய இவரைத் தீவிர வாதியாகவும்
தியாகியாகவும் ஆக்கியது.

எதிர்காலத்தில் இருந்தேன்

ஷாயர்

●

பொதுவாகவே பல அறிஞர்கள், சோதிடர்கள், ஆகியவர்கள் எதிர்காலத்தை நோக்கியவர்களாகவே இருப்பது இயல்பு. அதுபோலவே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள நமது மதிப்பிற்குரிய (A) தொகுதியின் பெரும்பான்மையாளர் மட்டுமே கொண்ட ஒரு கூட்டம் அரசியல் நிர்ணயசபையிலே எதிர்கால இந்தியாவிற்கான ஒரு அரசியல் திட்டத்தை வகுக்க அரும்பாடு பட்டு வரும் பரம சிக்கலான நிலையை ஊன்றிக் கவனித்தேன் ஒரு நாள்.

எவ்வளவு ஊன்றிக் கவனித்தேனோ தெரியாது. நான் எங்கேயோ போய்விட்டேன்.

எங்கேபோய்விட்டேன்? எதிர்காலத்திற்கே போய் விட்டேன். ஆம் நான் 1959-ம் ஆண்டுக்குப் போய் விட்டேன்.

அடடா! என்ன நிம்மதி, என்ன அழகு, எவ்வளவு குதூகலம்! என்ன திறமை பொருந்திய ஆட்சி முறை! இந்த 1959ல் தான் இந்த ஆட்சிமுறை!

ஒரே ஒரு சந்தேகம் உங்கட்கெல்லாம் எழத்தான் செய்யும். ஆமப்பா 1959—ல் ஆட்சிபாக்கிஸ்தானா? இந்துஸ்தானா?'' என்று கேட்பீர்கள். நான் கண்ட 1959—ல் ஒரே

இந்தியாதான்—ஒரே ஆட்சிமுறைதான். அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் எவ்வளவு அன்யோன்யம்! இந்தியாவிற்கும் சீனுவிற்கும் எவ்வளவு சிநேகம்.

இந்தியாவின் கருத்தறியாது அமெரிக்கா சர்வதேச பிரச்சனைகளில் தன் அபிப்பிராயம் தெரிவிப்பதில்லை. இப்பொழுது பாவம் இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் எவ்வளவோ பகைமை? சர்ச்சில்கூட இந்த 1959-ல் இல்லை.

அமெரிக்காவின் எண்ணெய்க்கிணறுகளின் விஸ்தரிப்பு முறைக்கு இந்த கேடுகெட்ட ஈரான் எவ்வளவு தடையாக இருந்தது.

விடுமா அமெரிக்கா? ஆரம்பித்தது போரை! ஏற்கனவே அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் உள்ள ராணுவப் பொருளாதார உடன்படிக்கைகளின்படி, இந்தியாவும் அமெரிக்காவிற்கு ஆதரவாகவும், ஈரானுக்கு எதிராகவும் போர் தொடுக்க வேண்டியதாகி விட்டது. இந்திய முஸ்லிம்கள் எவ்வளவோதான் எதிர்த்தார்கள். இருந்தாலும் அமெரிக்காவின் பகை நமக்கு வரலாமா? இந்தியாவும் போர்முரசறைந்தது: இந்தியப்பட்டாளங்கள், இந்திய யுத்ததளவாடங்கள் ஏராளமாகச் சென்றன.

அப்பொழுது நானும் விமானப் படையிலிருந்தேன். சென்றேன் இந்திய வீரனுக. இந்தியாவிற்காக வெற்றி கொள்வதே என்கடமை. என்னுடன் ஏராளமான படைகளும் வந்தன. விமானத்திலிருந்து குண்டுகளை வெளியே தள்ளும் பொறுப்பு என்னுடையது.

ஈரானின்மேல் பறந்துவந்து கொண்டிருந்தோம். எதிரிகளின் ராணுவத்தினர் கூடாரங்கள் தென்பட்டன.

'குண்டுகளை போடவும்' என்ற உத்திரவு எனக்கு கிடைத்தது. நான் சிறிது கூர்ந்து கவனித்தேன். ஆம் எதிரிகளின் கூடாரங்கள் நன்கு தெரிகின்றன. அவர்கள் வசமோ ஏராளமான பீரங்கிகள் இருப்பது எங்கட்குத் தெரிகின்றன. ஆனால் ஒரு விமான எதிர்ப்புப் பீரங்கிகூட எங்களை நோக்கிச்சுடவில்லை.

ஏனோ அவர்கள் சுடவில்லை.!

"குண்டுகளைப் போடவும்!" என்று மறுபடியும் அதிகாரத்தோரணையில் உத்தரவு கிடைத்தது.

நானும் குண்டுகளைப் போடத் தயார் செய்துகொண்டே இலக்குகளைக் கவனித்தேன். என் சொல்வது! கீழே தங்கியிருக்கும் ஈரான் இராணுவம் தொழுது கொண்டிருந்தது. "ஸுஜூதில்" இருந்த அணிகள் இப்பொழுது "தக்பீர் நிலையில்" நின்றன. அவ்வளவுதான் எனக்குக் குண்டு போட மனமில்லை. மேல் அதிகாரியின் பயங்கரமான குரல் கண்டிப்பாக என்னை விழித்தது "வஹாப்! என்ன வேடிக்கை பார்க்கிறாய்—குண்டுகளைப் போடு!" என்று அதட்டினார் மேஜர் நாராயணசாமி.

"ஸார்! எதிரியின் ராணுவம் கடவுள் வணக்கத்தில் இருக்கிறது. எனவேதான் அவர்களும் நம்மைச் சுடவில்லை. தொழுது முடிந்ததும் அவர்களும் நம்மைத்தாக்க ஆரம்பிக்கும் நிலையில் நாம் குண்டுகளைப்போடலாம் என்று நடுக்கத்துடன் பதிலளித்தேன்.

"டேய் அதிகப்பிரசங்கி! ராணுவம் என்றால் டிஸிப்பிளின் தான் பிரதானம். எதிரி தொழுதுகொண்டிருந்தால் என்ன, சும்மா இருந்தால் நமக்கென்ன! இப்பொழுது

குண்டுபோட்டால்தான் ஒரேயடியாகத் தொலேந்துபோவார்கள். மேலும் மத்தியானும் ஒரு மணிக்குத் தொழுகை என்னவேண்டியதிருக்கு. நீ குண்டுகளேப் போடு!" என்று உத்தரவிட்டார் மேஜர் நாராயணசாமி.

ஒரே உறுதியாக "முடியாது ஸார்" என்று பதில் அளித்துவிட்டேன். உடனே என்னேத் தள்ளிவிட்டு மற்ருெரு ராணுவ வீரன் வீராசாமி குண்டுகளே முடிக்கிவிட்டான். எங்களுடன் வந்த மற்ற விமானங்களும் குண்டுகளேப் பொழிந்தன. வெற்றிகரமாக மேஜர் நாராயணசாமி கீழ் நோக்கிப்பார்த்தார். அவர்கண்கள் வீர ஒளி கொடுத்தன. ஒரே புகைமயம். இறைவனின் வணக்கத்திலிருந்த இஸ்லாமியர்கள் என்னவானுேர்களோ என்று சிந்தித்தேன். என் இதயம்படபட வென்று அடித்தது. மேஜர் நாராயணசாமி என்னேப்பார்த்து வெறிச்சிரிப்புச் சிரித்தார். மறுபடியும் கீழேபார்த்தார். அவ்வளவுதான். என்முழுபலத்தையும் கொண்டு ஒரு உதை கொடுத்தேன். அடுத்தவிஞடியே மேஜர் நாராயணசாமி விமானதைப் பிரிந்து ஈரான் பூமியை நோக்கி மிக விரைவாகச் சென்ருர். அவருக்குப் பாரசூட்டு கூடகிடையாது!

எங்கள் விமானம் கராச்சி வந்து சேர்ந்ததும் நான் கைதியாக்கப்பட்டேன். ராணுவக் கோர்ட்டில் விசாரனே நடந்தது. எனக்கு ராணுவக்கோர்ட்டு கூறிய தீர்ப்பு:— "மேல் அதிகாரியின் உத்தரவுக்கு இணங்க மறுத்து குண்டுகளே வீசாதிருந்தது. மேலும் அவருடன் எதிர்வாதம் செய்தது. முடிவாக மேஜர் நாராயணசாமியை விமானத்திலிருந்து வீழ்த்தி அவரைக் கொன்றது. ஆகிய மூன்று பெரிய குற்றங்களேச் செய்திருப்பதால் அப்துல் வஹாப்

ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட வேண்டியவனே" என்பதேயாகும்.

நான் அதற்கு எதிரிடையாக வாதிக்கையில்:—நான் ஒரு முஸ்லிம். பொதுவாக அமெரிக்காவின் பேராசைக்காக நடக்கும் இந்த யுத்தத்திலே ஒரு முஸ்லிம் நாட்டின் மீது இந்தியாபடையெடுப்பதற்கு அதற்கு தகுந்த காரணங்கள் இல்லை. இதை முஸ்லிம் இந்தியா பலமாக எதிர்த்தது. இந்தியாவின் அரசியல் நிர்ணயம் தங்கள் மெஜாரிட்டியில் இருக்கிறது என்ற திமிரினல் இந்திய அதிகார வர்க்கம் இந்திய முஸல்மான்களை அலட்சியம் செய்துவிட்டு ஈரானின்மேல் யுத்தப் பிரகடனம் செய்தது.

இந்தியாவின் பேரால் இந்த யுத்தம் இந்தியச் சிப்பாய்களையும் கட்டுப்படுத்திவிட்டது. எனவே வெற்றி ஒன்றையே கருதி ராணுவத்தினர் ஈரான் நோக்கிப் பிரயாணம் செய்தனர். நான் விமானச்சேவையில் இருப்பவன். குண்டுகளைப் பொழியும்படி எனக்கு மேஜர் நாராயணசாமி உத்தரவிடும் பொழுது எதிரிகளான ஈரான்படையினர் தங்கள் கூடாரங்களின் நடுவில் இருந்த பொட்டலில் "லுஹர்" தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். அவர்களின் தொழுகை 'என்னையே எனக்கு' முஸ்லிம் என அறிமுகம் செய்துவைத்தது. யுத்தகாலத்திலும் இறைவணக்கத்தை விடாத அவர்கள் உறுதி என்னைத் தளர்வடையச் செய்தது. நான் சிந்தித்தேன் 'முஸ்லிம்களின் இராணுவம் இறைவணக்திலிருக்கும் பொழுது மற்றொரு முஸ்லிமாகிய நான் அவர்கள்மீது குண்டுகளைப் பொழிவது..........இதைச் சிந்தித்தேன். மயிர்க்கூச்செரிந்தது. சற்று பொறுத்து குண்டுகளை வீசலாமென்ற என் ஆலோசனையை மேஜரிடம்கூறினேன்.

என் ஆலோசனை புறக்கணிக்கப்பட்டு மற்றொருவீரனைக்கொண்டு குண்டுகள் வீசப்பட்டன. அழிந்தது ஈரான் இராணுவம் முழுவதும் என்ற வெறியால் என்னைப் பார்த்து ஏளனச்சிரிப்புச் சிரித்தார் மேஜர். என் மானம் நையாண்டி செய்யப்பட்டது. என் மனம் கொதித்தது. ஆயிரக்கணக்கிலுள்ள ஈரான் இராணுவத்தினர்கள் இறை வணக்கத்திலிருக்கும் பொழுது அழிந்துள்ளார்கள். அதைக் கண்டு வெறிச் சிரிப்புச் சிரிக்கும் மேஜரைப்பார்த்தேன். என் இஸ்லாமிய இரத்தம் கொதித்தது. அவ்வளவுதான். மேஜரை விமானத்தைவிட்டு வெளியேற்றி விட்டேன். 16000 அடி உயரத்திலிருந்து கீழேவிழுவதற்கு முன் அவர் நிம்மதியாக ஸ்மரணையை இழந்திருப்பார். ஆனால் நான் என் வாழ்நாள் முழுதும் வணக்கத்திலிருக்கும் பொழுது மடிக்கப்பட்ட ஈரான் இராணுவத்தை மறக்கமுடியாது" என்று விளக்கினேன்.

முடிவாகவும் என்னைச் சுட்டுக் கொல்லும்படியே உத்தரவு வந்தது. 40 இராணுவ வீரர்கள் அணிவகுத்து எல்லோரும் ஒரே நேரத்தில் கட்டுண்டு இருந்த என்னைச்சுட்டனர். 40 ஓட்டைகள் என் உடம்பில் ஏற்பட்டன. நான் இறந்துவிட்டேன்.

போதும் 1959 என்று கருதி 1947க்கு ஓடிவந்தேன். அதுதான் என்விழிப்பு. "நீ கண்ட கனவு வேறு பலர் கண்டுகளித்தது எனினும் இன்று அக்கனவுகாணும் திடம் கூட அவர்களுக்கு இல்லை. 1948-ம் வருஷமே இரண்டு அரசியல் நிர்ணயசபைகளைக் கொண்டு அமைந்து விடும் அஞ்சாதே!" என்று 1947 கூறுகிறது.

புல்லாங் குழல்

மருதூரம்.

★

அதோ! ஓர் சோலை. கோடிக்கணக்கான உயிர்கள் வாழுமிடம். அந்தப்பழைய அழகு அங்கு இல்லை. மந்த மாருதம் இல்லை. மலர். இல்லை. பின் மணம், காய் கனி இருக்குமா? பட்டுப்போனஆனால் வானைத் தொட்டுப் பார்க்கும் மரங்கள். பாடும் பறவைகள் என்றோ சென்று விட்டன. இன்றுவாடுகின்றவே உயிர்கள் பல. சிந்தனைச்சுனை வற்றிவிட்டது. அன்றைய சீரியநிலை ஏன் சிதைந்துவிட்டது?

வருகிறாயா? பதில் சொல்லவா? சாக்குப்போக்குச் சொல்லவா! 'சலாம்' கூறுகிறாயா? அரபிகூட சரியாக உச்சரிக்கத் தெரியவில்லையே? அதனை மறந்தே விட்டாய். ஆனால் உன் தொப்பி மிக மிக அழகா யிருக்கிறது! அணிந் திருக்கும் ஆடையில் அழகான கோடுகள்; வர்ணங்கள்! இவை உன் சின்னங்கள்! பேஷ்! இஸ்லாமியன் நீதானா? உனது இழிந்த நிலைக்குக் காரண மென்ன? விழிக்கிறாயே!

புல்லாங்குழலை என்றேனும் பார்த்ததுண்டா? ஒலித்த துண்டா? அதன் ஒலியை கேட்டதுண்டா? உன் இல்லத் தில் அது இல்லையோ? இருக்கிறது! ஆனால் நீ அதற்குப் பட்டுத் துணியில் உறை வைத்திருக்கிறாய், ஊதவில்லை!

அதன் அருமை உனக்கு எங்கே தெரியப் போகிறது? இடமிருந்தல்லவா, வலம் செல்லுகின்றன எழுத்துக்கள். ஆனால் அந்தச் சொற்களுக்குத்தான் என்ன உயிர்? ஆஹா! அந்தக்குழலின் ஒலி, வானத்தின் இன்னிசை!

அத்தெய்வீக ஒலியில் அகிலமே நின்று திளைத்ததே! அந்த ஒலியிலே அன்பரானோர் எத்தனைபேர்?

பாலைவனத்தில் கிளம்பிய அவ்வொலி புயல் அலறலையும் அழித்தொழித்ததே!

கோரமான காட்டில், பள்ளத்தாக்கில் 'ஈரமா'ன நாட்டில், உயிர்மேட்டில் உலாவிற்றே?

எட்டுத்திக்கும் எதிரொலித்ததே? அதை நீ அறிந்தாயா?

அன்று இசைத்தார் உன்நாதர், 'பண்ணி'னை; அம்புலியும் அசைந்தது; அவனிதனையே நோக்கி என்னே அந்த இசை, புல்லாங்குழலின் நல்லோசை! அதன் மகிமையை உணர்!

நீ மனிதன். ஆனால் நீள் விசும்பு தனில் உலாவும் உரம் உனக்குண்டு.

உறக்கந்தெளி! குழலின் நாதத்தை மறந்தாய் வீழும் பாதையிற் சென்றாய்.

உன் இல்லத்தின் விளக்கு மின் மினி என விளங்குவானேன்? அத்தீப ஒளி அன்று உனக்கு அழகு பூசிற்றே? உன் 'ஜோதி'ச் சுடரில் உலகம் காதல் கொண்டது அன்று. ஆனால் இன்று அப்பிரகாசம் ஒளிகுன்று வானேன்? அந்தச் சிமிளைப்பார்! அதில் எண்ணெய் இருக்கிறதா, என்று என்றும் பார்த்ததுண்டா? குற்றம் உனதல்லவா! 'சாந்தி' நெய்யை ஊற்ற உணர்வதில்லை! எனவே உன்னிடம் தெய்வீகம் குன்றியது. இன்று நீ இருளில் செல்கிறாய்!

உன் பூங்காவை விட்டு ஓடினை வெளியே. அச் சோலையின் 'வேலி'யை மாலை என மார்பில் வரித்தான் உன் மூதாதையன்! ஆனுல் நீ—நறுமணம் உன்னைக் கட்டுப்படுத்தும் வலை என எண்ணினுய்! அவன் வாழ்ந்தான்! நீ வீழ்ந்தாய் அவனைப் பின்பற்ருததால்.

வேலிக்கு வெளியே கண்கவர் புதுப்பூக்கள். எனினும் பச்சோந்தி நிறம்! உன்கண்கள் மயங்கின! கால்கள் வேலியைத்தாண்டின! 'வெளிநிறத்தி'ன் காமனுனுய்! நெருஞ்சி முள்ளில் சிக்கினை! முள்ளின் கடுப்புத்தாங்க முடியவில்லையா? மேலும் மலரிலோ மணமுமில்லை, தேனுமில்லை! ஏமாந்தாய்! உள்ளே வா! வெளியே நில்லற்க! உன் குழல் நீண்டுவாரற்று உறங்குகிறது!

இரத்த வாடைகண்டு இளைஞனே, ஏன் ஓட்டம் பிடிக்கிருய்? பூனையைக் கண்ட எலி வளையில் நுழைவதுபோல். காரணம்? உளத்தில் உண்மையில்லை; முந்தைய நாதம் இல்லை. உன் உடலில் இரத்தமும் ஓடவில்லை. மற்றேதோ?

சொற்கள் மட்டும் உதிர்க்கின்ருய். கற்கள் நீ எறிவதில் பஞ்சமில்லை, கனிகள் மட்டும் விழுவதில்லை. ஏன்?

உன் உள்ளம் காளான் காடு. மூடக் குவியலின் உறைவிடம்! ஈரமற்ற மரங்கள் அத்தோட்டத்தில் கருகிய செடிகள்! அப்பப்பா! கோரமான வறுமைச் சின்னங்கள்! அறிவின் வறுமைதானே?

மண்ணில் பொன்னுண்டு, உன்னில் வலுவுண்டு! விடுதலை விரும்புகிருயா? எடு புல்லாங்குழலை! உறையைக் கிழித்தெறி! உரை செய், எல்லோர்க்கும் விளங்கும்படி! ஊது குழலை! ஓது உணர்ந்து! சென்ற பறவைகள் திரும்பவரும்.

வசந்தம் வந்து கொண்டே இருக்கிறது. கோடையின் இறுதிநாட்கள், ஏன்? நினைத்தால் கணங்கள்! இளவேனில் உன்னைத்தழுவக் காத்துக் கொண்டிருக்கிறது.

நாதம் கிளப்பிவிட்டாயா? ஆஹா என்ன தெய்வீகம்! பாடும் குயில்கள் வந்து விட்டன! பட்ட மரங்கள் தளிர்த்து விட்டன! சுனை ஊற்றெடுத்து ஓட ஆரம்பித்து விட்டது!

நாதத்தில் மயங்கி—இறை போதனையில் உயர்ந்துவிடு. பின் நீ வான ஊஞ்சலில் ஆடுவாய்! ஞானக்கயிற்றின் துணையால். அப்புனிதப் புல்லாங்குழலே உன் வழிகாட்டி! அதனைப் புல்லிப்பற்று! உலகம் உனை நல்கிப்பற்றும்! பின் நீ 'இருதயங்களை' வென்றவன்! உலகம் உன் கையில்.

உன் ஒலி கேட்கிறது. கஃபா மக்காவின் இன்னிசையில் சொக்கிப்போய் விட்டது. விண்ணிலிருந்தும் பலம் வருகிறது. மதீனாவின் இருதயத்திலிருந்தும் ஆன்ம பலம் வருகிறது.

ஊதுகுழலே! உணர்வாய்! ஊது, ஊது, குழலே!

நல்வழியில் நடக்கும் மனிதனுடைய மௌனத்திற்கு மற்றவனுடைய சொல்வன்மையைவிட பலமுண்டு.

—ஷாயர்

படிப்பினை

நஜ்மா

●

என் நண்பன் ஜலீலிடம் என் வீட்டுப் பூனை குட்டிபோட்டிருப்பதாகக் கூறினேன்.

'நண்பா பூனைகள் குட்டிகளைப் பாதுகாக்கும் முறையைக் கவனித்தாயா ?

எவ்வளவு தொலைவிலே இரைதேடச் சென்றிருந்தாலும் அடிக்கடி வந்து குட்டிகளுக்குப் பாலூட்டி அவற்றை அன்புடன் அணைத்துச் செல்லும் அழகைக் கவனித்தாயா? எவ்வளவு பாதுகாப்பான இடங்களில் பதுக்கிவைக்கிறது தன் குழந்தைகளை!

சுமார் ஒருமாத காலத்திற்குள்ளே நீ யாரோ-நான் யாரோ? என்று பிரிந்து விடும் வர்க்கம்-தன் சுற்றம்—தன் இனம் என்ற தொடர்பில்லாதவர்க்கம். அதற்குக்கூட இறைவன் சிலநாள்வரை இந்த பந்தத்தை ஏற்படுத்தி யுள்ளான்.

நம் இனம்-நம் மக்கள் என்ற பந்தம் நமது பஞ்சாப்பிரதம மந்திரி மாலிக்கிஸர் ஹயாத்கான் திவாணவிற்கு இதற்குமுன் ஏற்பட்டிருந்தால்......என்று ஒரு பிரசங்கம் புரிந்தான் ஜலீல்.

நான் இடைமறித்து ஏன் ஜலீல் நமது பஞ்சாப் பிரதமரின் குணம்தான் என்ன குணமப்பா?" என்று ஒரு கேள்விபோட்டேன்

பின்புத்திக்காரர்களை நீ கண்டதில்லையா ?"

என்று மாற்றுக் கேள்விபோட்டு விட்டு ஜலீல் நீண்ட மௌனத்திலாழ்ந்தான்.

அந்தமௌனம் பெரியபோராட்டம்! எவ்வளவு பயங்கரமான ஆத்திரத்தை அடக்குவதற்கு அம்மௌனத்தை மேற்கொண்டானோ? முடிவில் அவன் கண்ணிலிருந்து இரண்டுசொட்டுக் கண்ணீர் விழுந்தது.

'என்ன ஜலீல்! உனக்கு ஏதாவது வருத்தத்தை ஏற்படுத்தி விட்டேனே?' என்று கேட்டேன்.

இல்லை உலகைப்பார்! ஒரு வீட்டில் தாயும் குழந்தைகளும் வசிக்கின்றனர். ஒரு மூர்க்கன் அக்குழந்தைகளை அபகரித்துச் செல்வதற்காக அணுகுகிறான். அவனிடம் ஏராளமான ஆயுதபலம் இருக்கிறது. இவனைக்கண்ட தாய் அலறுகிறாள்.

அத்தாயின் குரல் கேட்டு அவள் சுற்றம், அவள் இனம் அனைத்தும் ஓடி வருகின்றன. அனைவரும் நிராயுதபாணிகளே. என்றாலும் தற்காப்பிற்காகவும் தன்மானத்திற்காகவும் போரிடுகின்றன. உடல் பலம் என்ற திமிரும்ஆயுதபலம் என்ற உபகரணமும் கொண்ட அவன் மூர்க்கம் வெற்றியுறலாம் ஆனால் தன்னை எதிர்க்கும் அபலைகளிடம் உள்ள நியாயம்-இன உணர்ச்சி-மான உணர்ச்சி-கட்டுப்பாடு-ஒழுங்கு இவற்றைக் கண்ட அவன் மனித உள்ளம் நிச்சயமானதோல்வியையும் அவமானத்தையும் அடைகிறது. இது ஒரு மரத்தின்மீதுள்ள காக்கையின் கூட்டிலிலுள்ள குஞ்சுகளைக் கவர்ந்து செல்ல வில்லுடனும் வேலுடனும் செல்லும் வேடனுக்கும், இதைக்கண்ட காக்கையின் கூட்டத்திற்கும் நடக்கும் போராட்டம். என்னே அவைகளுக்குள்ள இனஉணர்ச்சி.

இம்மாதிரிதான் அன்று பாஞ்சால முஸ்லிம்கள்-பீரங்கி துப்பாக்கி-கண்ணீர்புகையோடு பைசாச உருவில் நடனமாடும் பஞ்சாப் சர்க்காரோடு தங்கள் இனஉணர்ச்சி கட்டுப்பாடு-இவற்றைப் பக்கபலமாகக் கொண்டு பல்லாயிரக்கணக்கில் ஒன்றுதிரண்டு போராடினர்.

காஷ்மீரத்திலே ஒரு முஸ்லிம் ஷேக் அப்துல்லாவின் விடுதலைக்காக ஒரு ஹிந்து ஜவஹர்லால் சென்றார். அவரை ஒரு ஹிந்து மன்னர் கைது செய்தார்-இந்நிகழ்ச்சியின் காரணமாக எழுந்தது மதுரையில். ஹிந்து முஸ்லிம் கிளர்ச்சி!

ஆனால் லாலா பீமசேனச்சசார் என்ற கல்விமந்திரியின் வக்காலத்துப் பேச்சுகளைக் கேட்டபோதும்கூட அன்றும் பஞ்சாபில்-குறிக்கோள் வழுவாத ஒரு போராட்டம் நடந்திருக்கிறது. ஏனைமதத்தவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றுவிட்டது. இதோ கட்டுப்பாடு-ஒழுங்கு-எதிர்கால முஸ்லிம் இந்தியாவிற்கு ஒரு வழிகாட்டி.

எதுவேண்டும்

K. P. முகமது தாவூத்

எதுவேண்டும் தமிழ்நாட்டு முஸ்லிம்கட் கிற்றைநாள்
என்றெண்ணி நோக்கும் வேளை
எண்ணற்ற வழிகளில் வேண்டுவன வனந்தமென்
றியம்புதலு மிகையாகுமோ
சதிசெய்து பொன்பொருள் தனதாய் குவித்துமனச்
சாந்தி யில்லாது துஞ்சும்
சன்மார்க மறியா உலோபிகளின் மனமாறிச்
சமுக நலன் காத்தல் வேண்டும்
பதியொன்று தவறாது பள்ளிகள் வேண்டும் பெரும்
பட்டின வாயிலெல்லாம்
பல்கலைக் கழகங்கள் நிறுவிடல் வேண்டுமதை
பணமுளோர் கருதல் வேண்டும்
மதிசிறிது மில்லாது விதி விதி என்றெண்ணும்
மடமைய தொழியவேண்டும்
மாமறை புருக்கான் வகுத்திட்ட நெறிமுறை
வழுவாத செயல்கள் வேண்டும்

பொய் பிரச்சாரங்கள் புரிகின்ற அன்னியப்
புத்தகம் பத்திரிகை
புகுகின்ற விடமெலாம் நந்தமிழ் தினசரி
பின்றுடர்ந்தாங்காங்குமே
கைமேல் பலன் போன்று கடிதினற் எதிராப்புக்
கடாவி வழிதிருத்தல் வேண்டும்

காரிகையர் கைலாகு கொண்டிடு கபடர்களின்
கருத்தறிந்து தெளிதல் வேண்டும்
மெய்மார்க்க இஸ்லாமியப் போதகந்தனைவேறு
விதமாய் விளக்கும் நீரார்
மேற்பூச்சினர் பப்புவேகாதெனத் தெளிய
விளக்க உரைகூறல் வேண்டும்
கைமாறு கருதாது கடமை மேற்கொள்ளுதல்
காளையர்க்கான பணியாய்
காலமெல்லாமேந்து காசினியெங்கும் முஸ்லிம்
கலாச்சாரம் பரப்பல் வேண்டும்

அறிவெனும் பொக்கிசம் ஆளனுக்கே யெனும்
அறியாமை யகலவேண்டும்
அயல் நாட்டு நிகழ்ச்சி பல அறிய நூற்தொகுப்புநம்
அம்மையரு முணரல் வேண்டும்
சரியான இந்திய முஸ்லிம் எனவேண்டிற்
சகலதுறை ஞானம் வேண்டும்
சன்மார்க்கமேயலால் துன்மார்க்கமே கிடற்
சாமளவு முயல்தல் வேண்டும்
அரியாசன மீந்து அவனி முடி சூட்டினும்
அன்னியர்கள் வலையில் வீழ்ந்து
அமையாது நமதுரிமை ஆராய்ந்து காயிதே
அஃஜமுறை போற்றவேண்டும்
துரிதமாய் இந்தியச்சுய ஆட்சிவேண்டுமெனில்
துய்மைதரு பாகிஸ்தானம்
சொல்லறிய முறையன்றி வெல்லும் வழிஇல்லையெனும்
சொற்சத்ய மாகல் வேண்டும்.

மாற்றுரும் - - - - - போற்றுகிருர்!

K. மஸ்ஊத் அஹமது.

●

சிலர் இஸ்லாத்தின் தற்கால நிலையை ஓர் ஆதாரமாகக்கொண்டு, இஸ்லாம் எந்தவித கலைப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் ஏற்படுத்தி இருக்கமுடியாது என்று சாதிக்கிருர்கள். இது இஸ்லாத்தின் பரம விரோதிகளாலும், பிற மதஸ்தர்களாலும் கூறப்பட்ட குற்றச்சாட்டேயாகும். நன்ருய் கற்றறிந்தவர்கள்கூட இஸ்லாத்தின் உண்மைத் தத்துவங்களை உணர்ந்தும் உண்மைக்கு விரோதமாக திரித்துக் கூறினுர்கள். முதலிலே சொல்லப்பட்ட குழு இஸ்லாத்தின் நாகரிகத்தை ஐரோப்பிய நாகரிகத்துடன் பிணைப்பது, ஐரோப்பிய நாகரிகத்தின் உருவிலே அதை அமைப்பது என்று அலைபவர்கள். இரண்டாவது சாரார் இஸ்லாமிய உலகில் நாஸ்தீகத்தை பரப்ப வேண்டும் என்ற நோக்கமுடையவர்கள்.

ஒரு மதத்திற்கும் நாகரிகத்திற்கும் நெருங்கிய உறவிருக்கின்றது. சமயக் கோட்பாடுகள்தான் ஒரு நாகரிகத்தை பண்படுத்துகின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனுல் ஒரு நாகரீகத்தின் போக்கை எப்பொழுதுமே மதம்தான் நிச்சயிக்கும் சக்தி வாய்ந்தது என்று கூறிவிட முடியாது. ஏனென்ருல் மதத்தின் செல்வாக்கு மக்களிடையில் சில சமயம் தளர்ந்து சக்தி இழக்கின்றது. அப்பொழுது அம்மக்கள் மதத்தின் கட்டுப்பாட்டிலிருந்து நழுவி விடுகின்ருர்கள். மதத்தின் சீர்கேடான நிலைமை மக்களிடையே பல பிரிவுகளை ஏற்படுத்தி விடுகின்றது. ஒரு சமூகம் ஒழுக்க நிலை குன்றும்போதுதான் அச்சமூகம் இழி நிலை அடைகிறது. அதற்கு மதம்தான் பொறுப்பு என்று கூறுவதற்கில்லை.

மதத்தின் சட்ட திட்டங்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட—கட்டுப் படுத்தப்பட்ட—ஒரு கலைப் பண்பாடு திடீரென்று அதற்கு புறம்பான, அதன் ஆதிக்கத்திற்கு அடங்காத சக்தியால் ஆக்கிரமிக்கப்பட்டு அழிக்கவும் படுகிறது. இதே நிலைமைகளுக்கும்கூட மதம்தான் பொறுப்பு என்று சொல்வதற்கில்லை.

தற்கால முஸ்லிம்களுடைய பிற்போக்கு, இழிநிலை மதத்தினால் அல்ல! அதனுடைய கோட்பாடுகளை அறியாத அறிவீனத்தால்! அதனுடைய உண்மைத் தத்துவங்களை புறக்கணிப்பதால் ஏற்பட்ட தேயாகும். இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் அமுலில் இருந்த காலம் வரை முஸ்லிம் சமூகம் சீரும் சிறப்புடன்தான் வாழ்ந்துவந்தது.

இஸ்லாமிய நாகரீகம் ஒரு கற்பனைப் பொருளல்ல. மறுக்கமுடி யாத சரித்திர உண்மை. ஜெர்மனி, பிரஞ்சு, பிரிட்டன், இத்தாலி முதலிய ஐரோப்பிய நாடுகள் இஸ்லாமிய நாகரீகத்தைப்பற்றிய எண் ணற்ற புத்தகப் பொக்கிஷங்கள் கொண்டதாகவே யிருந்தன. இதுவே இஸ்லாமிய நாகரீகம் கற்பனைச் சரக்கல்ல என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும் திருக் குர்ஆனின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட, முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையாலேயே வளர்க்கப்பட்ட, ஒரு இஸ்லாமிய நாகரீகம் இல்லை யென்றால் எவ்வாறு ஐரோப்பிய அறிஞர்களால், அதிலும் இஸ்லாத் தின் பரம விரோதிகள் என்று கருதப்படுபவர்களால், இதர மதங் களைப்பற்றி ஆராயும் பொழுது அடிக்கடி இஸ்லாமிய நாகரீகத்தை ஓர் உயரிய எடுத்துக்காட்டாக உபயோகிக்கமுடியும்? எவ்வாறு அவர்களால் அதன் சரித்திரத்தை ஆதாரமாகக்கொள்ள முடியும்? எவ்வாறு அவர்களால் இஸ்லாமிய தத்துவங்கள் கொண்ட கலை நாக ரீகத்தையும் மற்ற நாகரீகங்களையும் ஒப்பிட்டு இஸ்லாமிய நாகரீகம் மிகவும் உயர்ந்தது, மதிக்கப் பெற்றது என்று நிரூபிக்க முடிகிறது?

இஸ்லாமிய நாகரீகம் உலகச் சரித்திரத்திலேயே ஓர் மகத்தான இடம் பெற்றிருக்கிறது. அழியாத உலக நூற்கழகங்கள் இன்றும் இஸ்லாமிய சின்னங்களை பாதுகாத்து பயன்படுத்தி வருகின்றன.

கலீபாக்களான மன்ஸூர், ரஷீத், மாமூன் இவர்கள் அரசாண்ட காலத்தில் பக்தாத் நகரம், எண்ணற்ற எழில் நிறைந்த மாடமாளிகைகளாலும், வாழ்க்கை மனோரம்பியத்தாலும், அளவற்ற செல்வத்தாலும், சீரிலும் சிறப்பிலும் ஓங்கி இருந்தது. அதற்கு முன் வாழ்ந்த சமூகங்களாலோ, பின்னர் வாழ்ந்தவைகளாலோ அணுகக்கூட முடியாத ஒரு அளவுக்கு பக்தாத் ஒரு கலை வாழ்வு வாழ்ந்திருந்தது. அக்காலத்தில் அதன் ஜனத் தொகை 25 லட்சம். பாஸ்ராவை அதற்கு இரண்டாவதாகக் கூறலாம். அதனுடைய ஜனத்தொகை 5 லட்சம்.

திமஷ்க், காஹிரா, அலப்போ, ஸமர்கந்த், இஸ்பஹான்— இவைகள் கலை வளர்ச்சிக்கும், விஞ்ஞான விருத்திக்கும், மக்கள் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் வாழ்வதற்குள்ள வசதிகளுக்கும், அழகிய மாளிகைகளுக்கும் ஓர் முன்மாதிரியாக விளங்கின!

கெய்ரோவான், பேஸ், தேலிம்கான், மோராக்கோ முதலிய ஆப்பிரிக்க நகரங்கள் நாகரீகத்தின் உச்ச நிலையை அடைந்து நாகரிகத்திற்கு ஓர் நவீனமாக விளங்கின. அவைகளின் பெருமையை தற்கால ஐரோப்பிய சமூகம் மறுக்கவோ மறைக்கவோ முடியவில்லை.

பதினைந்து லட்சம் ஜனத்தொகை கொண்ட கார்டோபா நகரத்திற்கு ஈடாக ஐரோப்பாவிலே வேறொரு நகரம் இருந்ததில்லை. நகரத்தின் பிரதம மஸ்ஜிதுபோக 700 பள்ளிவாசல்களும் இருந்தன. அந்தப் பெரிய மஸ்ஜிது சுமார் 80 ஆயிரம் பேர் தொழுவதற்கு வேண்டிய இடவசதியுள்ளது என்று எஞ்ஜினியர்கள் கணக்கிட்டிருக்கின்றனர்.

இன்னும் ஸாஹிரா கோட்டை ஒரு அரண் மாத்திரம் இல்லை. ஒரு அழகான நகரமாகவே காட்சியளிக்கிறது. அதன் நீளம் 3000 அடி. அகலம் 2600 அடி. அழிந்த அக்கோட்டைக்குள் புதைக்கப்பட்டிருக்கும் கலைச் செல்வங்களைத் திருவி எடுப்பதற்கு இனியும் ஐம்பதாண்டுகள் ஆகலாம் என்று அபிப்பிராயப் படுகிறார்கள் ஆராய்ச்சி நிபுணர்கள்.

15ம் நூற்றாண்டிலே ஒரு சிறு முஸ்லிம் ராஜ்யத்தின் தலை நகரான கிரநடாவிற்குச் சமமாக ஐரோப்பாவில் வேறு எந்த நகர மும் இருந்ததில்லை. இன்று அது அழிந்து போனாலும் இஸ்லாமிய கலையே, நாகரீகமே உருவெடுத்தாற்போல விளங்குகின்றது. ஸ்பானி யர்கள் அதைக் கைப்பற்றிய அக்காலத்தில் அதன் ஜனத்தொகை 500 ஆயிரம். ஐரோப்பாவில் இந்த ஜனத்தொகையில் பாதி அளவுகொண்ட வேறு ஒரு நாடுகூட இருந்ததில்லை. கிரநடாவின் அதிசயமும் அபூர் வமும் நிறைந்த அல்ஹம்ரா மாளிகை அழிந்து சீர்குலைந்துவிட்டா லும் இன்றும் அதன் கலைப் பொலிவு காட்சியளிக்கின்றது.

இஸ்லாமிய நாகரீகக் கலைச் சரிதையின் ஒரு பகுதியை மேலெழுந்தவாரியாகவே இதைப் பார்க்கிறோம். இன்னும் இஸ்லா மிய இனம் சாதித்ததை—கண்ட கலையை—வளர்த்த நாகரீகத்தைப் பற்றி வரைவது என்றால் எத்தனை புத்தகங்கள் வேண்டுமானாலும் எழுதலாம். எத்தனை விலைமதிக்க முடியாத புத்தகங்கள் இஸ்லாமிய நாகரீகத்தைப் பற்றி ஐரோப்பிய சரித்திராசிரியர்களால் எழுதப்பட் டுள்ளன! எத்தனை அழகான புகைப்படங்கள் அவர்களால் வெளி யிடப்பட்டிருக்கின்றன! இஸ்லாத்தின் பரமவிரோதிகளுக்குகூட அதனுடைய நாகரீகத்தின் மேன்மையை ஒரு சிறிதளவாவது குறை கூறுவதற்கு தைரியம் ஏற்படவில்லை. இஸ்லாம் ஒரு புதிய விஞ்ஞா னத்திற்கு அடிப்படையாக விருந்தது. அல்லது அவர்கள் சொந்த ஆராய்ச்சியும் உழைப்பும விஞ்ஞானத்தை வளர்த்திருக்கின்றன என் பதை மறுப்பதே மேற்கூறிய சரித்திர ஆசிரியர்களின் நோக்கம். இதை அவர்களுடைய எழுத்துக்களிலிருந்து தெரிந்துகொண்டோம்.

"முஸ்லிம்கள் மேல்நாட்டார்களையும் கீழ் நாட்டார்களையும் காப்பி அடித்து இரண்டையும் ஒன்றோடொன்று இணைக்கக் கற்றுக் கொண்டார்களே ஒழிய வேறொன்றும் அவர்கள் செய்யவில்லை" என்று குறைகூறுபவர்கள் தங்களுக்குள்ளேயே சொல்லிக்கொண்டு மனதை சமாதானப் படுத்திக்கொள்கிறார்கள். மேற்கூறிய நோக்கங் களை உடைய ஆராய்ச்சியாளர்களின் பிரச்சாரங்களும், நூற்களும்

நன்றாய்க் கற்றறிந்த அறிஞர்களால் உபயோகமற்றவை என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அவர்களாலேயே இஸ்லாம் கலைக்கும், விஞ்ஞானத்திற்கும் செய்த சேவையை அநேக இடங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டன. இன்னும் அவர்களில் சிலர் இஸ்லாமிய சட்ட திட்டங்களை ஆழ்ந்த நோக்குடன் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்த உண்மைகளை உலகுக்கு பல மொழிகளில் எடுத்துக்காட்டினார்கள்.

உலகத்தில் ஒரு சமூகமாவது, அதற்கு முந்தி வாழ்ந்த சமூகத்தின் கலை நாகரீகம் இவைகளிலிருந்து ஒரு சிறு அளவையேனும் உடமையாக்காமலில்லை, தனித்து நிற்கும் பண்பு ஒரு நாகரீகமும் பெறவில்லை. ஒவ்வொரு மனிதனும்கூட அதில் உரிமை கொண்டாடலாம். மாறுபட்ட எண்ணற்ற மக்களின் இயற்கை கருத்துக்களும் வேறுபட்ட பல சமுதாயங்களின் அறிவுச் செல்வமுமேயாகும் நாகரீகம் என்பது.

அனாச்சாரத்தில் உழலும் ஆஸ்திகன் நாஸ்த்திகனுக்குத் துணை செய்கிறான்.

—ஷாயர்

வாள் முறியாதது

எம். கே. ஈ. மௌலானா

★

"1857ம் ஆண்டிலே சிப்பாய்க் கலகம் நடந்தது" என்று கூறப்படுகிறது. ஆனால் அந்தக் கலகத்தின் முழுச் சரித்திரத்தையும் ஆராய்ந்து பார்க்கும்போது அது ஒரு சாதாரண கலகம் மட்டுமல்ல. அது இந்தியர்களின் ஜீவ மரணப் போராட்டம். 'இந்தியர் மானத்தோடு வாழ்வதா, அல்லது மடிந்து மண்ணுவதா?' என்ற பிரச்னைகளோர் முடிவுகட்டும் போராட்டம்!

மீரத்திலே துவக்கிய அந்தப் போராட்டமானது தொடர்ந்து இரண்டு வருடகாலம் இந்தியாவின் எல்லாத் திக்கிலும் நடந்தது. எண்ணிறந்த மக்கள் அந்தப் போராட்டத்திலே வீர ஸ்வர்க்கமடைந்தனர். இந்தப் போராட்டத்தின் முக்கிய தளபதிகள், மௌல்வி அஹ்மதுஷா, நானா சாகிபு, ஜான்ஸி ராணி இலக்ஷிமி பாய் இவர்களேயாகும், ஒவ்வொரு திக்கிலிருந்தும் ஆரம்பிக்கப்பட்ட புரட்சியானது, தன்னையும், தன் சொத்து சுகம் அத்தனையும் திரனமாக மதித்து செயலிலிறங்கிய வீரர்களை டில்லியை நோக்கித் தள்ளிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு திக்கிலிருந்தும் புரட்சியைத் துவக்கும் வீரர்கள் தங்கள் முகாம்களிலிருந்து டில்லி வரை அன்னியர்களின் சுவடே தெரியாதபடி அழித்துக்கொண்டே போய், கடைசியாக டில்லியிலிருக்கும் தைமூர் வம்சத்தின் கடைசிச் சக்ரவர்த்தியான பஹதூர்ஷாவிடம் ஐக்கியமாகவேண்டுமென்பது புரட்சித் தலைவர்களின் கட்டளை.

பிளாஸி யுத்தத்தில் ஆங்கிலேயர் செய்த கொடுமைக்கு காணுமிடமெல்லாம் ஆங்கிலேயரைப்பழிவாங்கிக்கொண்டே வந்தார்கள். ஆனால் ஆங்கிலேயர் பிளாஸி யுத்தத்திலே, ஆண் பெண், வாலிபர் வயோதிகர், என்ற வித்தியாசமின்றி, கண்டவர்களை யெல்லாம் பிடித்துக் கொன்றதுபோல் இந்தியர்கள் நடந்து கொள்ளவில்லை. புரட்சி வீரர்கள் தர்மத்தின்படியும், நியாயத்தின்படியும், போரிற் செய்ய வேண்டியதைச் செய்தனர். இத்தனைக்கும் சக்ரவர்த்தி பஹதூர் ஷா டில்லி கோட்டையிலிருந்து யுத்தத்தின் போக்கை நிதானித்துக் கொண்டிருந்தார்.

இந்தியாவிலே அற்பர்களின் துரோகச் செய்கையினால் மொகல் சாம்ராஜ்யம் அழிந்து இந்தியர்கள் அன்னியருக்கு அடிமைப்பட்டு, புனிதமான இந்திய தேசம் பாதகர்களால் அடிமை என்னும் கொடும் பைசாசத்திற்கு பலியிடப்பட்டு நூறு ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. இந்தியாவை அடிமை கொள்ளும் பணியிலே ஆங்கிலேயர் வெற்றி கொண்டுவிட்டனர். இந்தியர்களிடையே நிலவி வந்த ஒற்றுமையின்மையே ஆங்கிலேயருக்கு அந்த வெற்றியைக் கொடுத்தது. ஆனால் நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகிகளும்கூட ஆங்கிலேயர் வெற்றியடைந்த சொற்ப காலத்திலேயே தாங்கள் செய்தது அழிக்கமுடியாத அபசாரம் என்பதைத் தெரிந்துகொண்டார்கள். அந்த ஒரு நூறு வருஷ ஆட்சிக்குள்ளே ஆங்கிலேயர் இந்தியர்களை, 'தான் ஒரு மனிதன் என்ற எண்ணத்திலிருந்து' தான் ஆங்கிலேயருக்குத் தொண்டு செய்யும் ஒரு அடிமை என்று எண்ணும்படியான நிலைக்கு ஆக்கி வைக்க அரும்பாடுபட்டார்கள். ஆனால் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகள் சுதந்திரத்திலே வாழ்ந்து, அடிமைத் தனத்தை இன்ன

தென்று கண்டறியாத இந்தியர் இரத்தத்திலே அது ஏற வில்லை. அதற்குப் பதிலாக ஆங்கிலேயர்பால் இந்தியர்களின் அதிருப்தியும் வெறுப்புமே அதிகரித்துக் கொண்டு வந்தது. உள்ளுக்குள்ளே புகைந்து கொண்டிருந்து கடைசியாக ஒரு நாள் மீரத்திலே அது ஊழித் தீயாக எறியத் துவக்கி யது. அங்கு பற்றிக்கொண்ட நெருப்பானது சில தினங் களிலேயே தேசமெங்கும் பரவிவிட்டது. அந்தச் சமயம் மகா ராஜ தந்திரிகளான ஆங்கிலேயர் இந்தியப் பாமர மக் களின் கண்ணைத் துடைப்பதற்காக மஹா வீரர்களான பாபர், ஔரங்கசீப் போன்ற சக்ரவர்த்திகள் அரியாசன மிருந்து செங்கோலோச்சிவந்த சிம்மாசனத்திலே யாரை யாவது ஒரு பொக்கியை வைத்து இந்தியர்களை ஏமாற்றி வந்த நியதிப்படி, சக்ரவர்த்தி பஹதுர்ஷாவை சிம்மாசனத் தில் அமர்த்த இருந்தார்கள். 'அவரும் முன்னவர்களைப் போன்று தங்கள் கைப் பொம்மையாகவே இருப்பார்' என்று ஆங்கிலேயர் மட்டுமல்ல இந்தியர்களில் பெரும் பாண்மையோரும்கூட அப்படியே முடிவு செய்திருந்தனர். ஆனால் இந்தப் புரட்சி தோன்றியது, 'சக்ரவர்த்தி பஹதூர் ஷா பேடிகள் குழுவை சேர்ந்தவரல்ல. உண்மையிலேயே பாபரின் — ஹிமாயூனின் — ஔரங்கசீபின் சந்ததியில் தோன்றியவர்தான்' என்பதை நிலைநாட்டவேயாகும். டில் லியில்—அதுவும் ஆங்கிலேயரின் பாதுகாப்பிலிருந்து கொண்டே, புரட்சி வீரர்கள் எங்கெங்கு இருக்கின்றனரோ —புரட்சி எங்கெங்கு நடக்கின்றதோ அங்கெல்லாம் ஒற்றர் கள் மூலம் ஒவ்வொரு நிமிஷமும் செய்திகள் அனுப்பிக் கொண்டிருந்தார். சக்ரவர்த்தியின் ஒவ்வொரு அறிக்கை களும் சிப்பாய்களின் மனதுகளிலிருந்து மரணத்தின் பயத் தைப் பிடுங்கி எறிவதாயிருந்தன. அத்தோடு, போரை

நடத்திக்கொண்டிருக்கும், மகா வீரர்களும், அரும்பெரும் தியாகிகளுமான, தேசத் தலைவர்கள், மௌல்வி அஹ்மது ஷா, வீரகேசரி தாதியா தோபே, அயோத்தி நவாபு, தியாகி மங்கள பாண்டே, நானா சாகிபு முதலியோர்களிடமிருந்து தினசரி தாங்கள் செய்யப்போகும் காரியத்தைக் குறித்தும், செய்த வேலைகளைக் குறிப்பிட்டும் சக்ரவர்த்திக்குத் தகவல் கிடைத்துக்கொண்டே இருந்தது.

இதற்கிடையில் மீரத்தில் ஆரம்பமான புரட்சி ஐந்து நாட்களில் காட்டுத் தீபோல் நாடெங்கும் பரவி டில்லி கோட்டைக்குள்ளும் பற்றி எறியத் துவங்கியது. கோட்டைக்குள் நுழைந்து கொண்டிருந்த தேச பக்தர்களின் ஆவேசத்தை எந்த சக்தியும் தடுத்து நிறுத்த முடியாமற் போய்விட்டது. தேசத் துரோகிகளான சில இந்தியச் சிப்பாய்களும், ஆங்கிலப் படையும் தேச பக்தர்களின் முன் நிற்க முடியாமல் சிதறுண்டு ஓட்டம் பிடித்தன. இறுதியில் டில்லி அரண்மனை ஜனங்களுடைய ராணுவத்தின் வசமாயிற்று.

அரண்மனையிலே தேச பக்தர்கள் நுழைந்ததும் சக்ரவர்த்திக்கும், சுதந்திரத்திற்கும் மரியாதையாக, இருபத்தொரு குண்டுகள் போடப்பட்டன.

"சக்ரவர்த்தியே! மீரத்தில் ஆங்கிலேயர் தோல்வியடைந்துவிட்டனர். டில்லி உங்கள் வசம் இருக்கின்றது. பெஷாவரிலிருந்து கல்கத்தாவரையில் மக்களும் மாவீரர்களும் உங்கள் உத்தரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர். ஆங்கிலேயரின் அடிமைச் சங்கிலியைத் அறுத்து ஆண்டவனால் அருளப்பட்ட நமது பிறப்புரிமையாம் சுதந்திரத்தைப்பெற இந்தியா முழுவதும் ஆர்த்தெழுந்துவிட்டது.

இப்பொழுது தங்கள் சுதந்திரக் கொடியைப் பிடித்து, கடைசி அன்னியனை இங்கிருந்து ஓட்டும்வரை மக்கள் போர்புரிய நீங்கள் ஆசி கூறல் வேண்டும்" என வேண்டினார்கள்.

இவ்வாறு ஹிந்து—முஸ்லீம் தலைவர்கள் ஒற்றுமையுடனும், உணர்ச்சி ததும்பவும் கூறிய ஆவேச மொழிகளைக் கேட்ட சக்ரவர்த்தியின் நெஞ்சம் நெகிழ்ந்து அவரது உள்ளத்தில் ஒரு தெய்வீக உத்வேகம் எழுந்தது. "அடிமைச் சேற்றிலே அகப்பட்டு உழல்வதைவிட, அடிமைச் சங்கிலியைத் தகர்த்தெறியும் பணியிலே உயிர் துறப்பது மகா உத்தமம்" என்ற உன்னதமான நோக்கம் சக்ரவர்த்தியின் மனதில் எழுந்தது.

ஆனல் போர்புரியத் தயாராக இருக்கும் வீரர்களுக்கு பொன்னை அளிக்க பொக்கிஷத்தில் பொருளேது? உரிமை பெற ஊதியமின்றியே உழைக்க முன் வந்த மக்களின் சுதந்திர வேட்கையைக்கண்ட வயோதிக பஹதூர் ஷாவிற்கே வாலிப உணர்ச்சி பிறந்தது.

ஆயுதப் பயிற்சியே அளிக்கப்படாத மக்கள் அகப்பட்டதை வைத்துக்கொண்டு அன்னியரைத் தாக்க ஆரம்பித்தனர். அதைக் குறித்து ஒரு ஆங்கில ஆசிரியர் கூறும்பொழுது "டில்லி மாந்தர் சந்தோஷப் பெருக்கெடுத்து ஆவேச மிகுதியால் செய்த அந்தக் குழப்பமானது அவர்களை ஒழுங்கு தவறச் செய்துவிட்டது. அவர்களை முறையாக நடத்திச் செல்லும் ஒரு தலைவரைத் தெரிந்துகொள்ளவும் முடியாமலாக்கிவிட்டது. ஒழுங்கான தலைவர்களிருந்து, ஜனங்களின் உணர்ச்சியைக் கட்டுப்பாடான முறையில் நடத்திச் சென்றிருப்பார்களாயின் அது மகத்தான ஒரு

சக்தியாகத் திரண்டெழுந்திருக்கும். கிழக்கு நாடுகளிலே ஆங்கிலேயரின் சுவடே இல்லா தொழிந்திருக்கும்" என்று விவரித்திருக்கின்றூர்.

உண்மை நிலைமையும் அப்படித்தானிருந்தது. ஜனங்களின் ஆவேச உணர்ச்சியானது மிதமிஞ்சிய காரணத்தால் நகரத்தில் அராஜகத்தை விளைவித்துவிட்டது. மகா யூகிகளான—ஆங்கிலேயர் இந்த சந்தர்ப்பத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுவிட்டனர். அவர்களின் சூழ்ச்சி, புரட்சி வீரர்களிடமும் நன்றுக வேலை செய்தது.

சக்ரவர்த்தியின் முன்னுல் நின்று, "சக்ரவர்த்தி உத்திரவிட்டால் நாட்டின் விடுதலைக்காக சகலத்தையும் துறந்து போரிற் குதிப்போம் எனச் சபதம் செய்தவர்களே, இப்பொழுது ஆங்கிலேயரின் சூழ்ச்சியில் சிக்கிக்கொண்டு உள்ளுக்குள்ளேயே பிளவுகளை யுண்டாக்கிவிட்டனர். பல ஆயிரக் கணக்கான வீரர்களைக் கொண்ட தேசீயப் படையின் பல பிரிவுகளும் ஒன்றை ஒன்று சந்தேகக் கண்கொண்டு பார்த்துக் கொண்டிருந்தன. அந்தப் பட்டாளங்களின் சில பிரிவுகள் எதிரிகளுடன்கூட சேர்ந்துகொண்டன. கடைசியாக சக்ரவர்த்தி பஹதுர்ஷாவும், அவரின் குடும்பத்தாரும், மெய்க்காப்பாளர்களான அவரின் தோழர்களும் திக்கற்ற நிலைமையில் தனித்துவிட்டார்களென்றுலும், சக்ரவர்த்தியின் மெய்க்காப்பாளர்கள் இறுதிவரை எதிரிகளுடன் பொருதி வீர மரணம் அடைந்தார்கள். அன்றைய நிலையை விளக்கும் ஒரு ஆங்கில ஆசிரியர்;

"சீக்கியர்களும், கூர்க்கர்களும், பல ஹிந்துக்களும் நம்மோடு சேர்ந்துகொண்டு தேசீயப் படைகளுக்கு விரோத

மாகப் போர் புரிந்திராவிடில் அன்றே நாம் ஒழித்துக்கட்டப்பட்டிருப்போம். நமது கதி அதோகதியாகியிருக்கு”மென்று கூறி இருக்கின்றார்.

இந்த நிலைமையைச் சக்ரவர்த்தியும் உணராமலில்லை. இதற்குப் பிறகு, ‘நாம் வெற்றிபெறுவோம்’ என்று அவர் கனவுகூடக் கண்டிருக்கமுடியாது. யார் துணையில் நடந்துகொண்டிருந்ததோ அவர்களே எதிரிகளுடன் சேர்ந்துகொள்ளும்பொழுது எப்படி வெற்றியைப் பற்றிச் சிந்திக்க முடியும்?

இப்பொழுது ஆங்கிலேயர்களுக்கு, பல பகுதிகளில் சிதறுண்டு கிடந்த தங்கள் பட்டாளங்களை ஒன்று சேர்த்து டில்லிக் கோட்டையை முற்றுகையிட, வாய்ப்பும் கிடைத்தது. தேசிய வீரர்களைவிட எவ்வளவோ தாங்கள் பலம் பெற்றிருந்தும், தேசிய வீரர்களின் சுதந்திர வேட்கையின் முன்னால் ஆங்கிலேயர் வெற்றி பெறுவது சிரமசாத்தியமானதாகவே இருந்தது. ஆகையாற்றான் டில்லி கோட்டையை அவர்கள் பல நாள் முற்றுகையிட வேண்டியிருந்தது.

பல நாள் முற்றுகைக்குப் பிறகு கோட்டையும் வீழ்ந்தது. அந்தச் சமயம் தளபதியான பகத்கான் சக்ரவர்த்தியையடுத்து, “பாதுஷா! நமது சைன்யம் சக்தி யிழந்துவிட்டது. இன்னும் நாம் தாமதித்தால் எதிரிகளிடம் சரணடைவதைத் தவிர வேறு வழி இல்லை. சரணடைவதைவிட, சமர்செய்து கொண்டே இங்கிருந்து அகன்றுவிடலாம்” என்று ஆலோசனை கூறினார்.

தேசத் துரோகிகளான மோசக்காரர்களின் செய்கையினால் மனமுடைந்து போயிருந்த சக்ரவர்த்தி, தளபதியின் வேண்டுகோளுக்கு யாதொரு பதிலுமுரைக்காமலிருந்துவிட்டு, கடைசியாக அன்னியர் படைகள் கோட்டைக்

குள்ளும் பிரவேசித்துவிட்ட பிறகு, செயலற்றுப்போய் செய்வதறியாது, சக்ரவர்த்தி ஹுமாயூன் சமாதியருகில் போய் உட்கார்ந்துவிட்டார். ஆங்கிலேயர் கோட்டைக் குள், நுழைந்ததும் சக்ரவர்த்தியும், மூன்று இளவல்களும் எங்கே இருக்கிறார்கள் என்று காட்டிக்கொடுக்க ஒரு துரோகி தயாராக இருந்தான்.

கல் நெஞ்சனான தளபதி 'ஹாட்ஸன்' என்பான் தனது துப்பாக்கியில் நின்றும் வெளியான மூன்று தோட் டாக்களுக்கு இளவல் மூவரையும் இரையாக்கினான். அத் தோடு அவன் ஆத்திரம் தீரவில்லை. "அந்தப் பிரேதங்கள் டில்லிமா நகரத்தின் நடுத்தெருக்களிலே இழுத்தெரியப் பட்டு, கழுகுகளுக்கும் பருந்துகளுக்கும் இரையாக வேண்டும்" என்றும் உத்திரவிட்டான்.

பாதுஷா ஜாஹிருத்தீன் முஹமத் பாபரின் முகலாய சாம்ராஜ்யம் அன்றோடு அழிந்தது. தைமூர் வம்சத்தின ரின் தகைமை சால் ஆட்சி அன்றோடு மறைந்தது.

* * * *

டில்லி கோட்டையை ஆங்கிலேயர் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தசமயம் ஒரு கவி, பஹதூர்ஷாவிடம், "மன்னர் மன்னரே! தங்கள் வாள் நிரந்தரமாக முறிந்துவிட்டது. ஒவ்வொரு வினாடியும் உங்கள் நிலைமை ஆபத்தடைகிறது. இப்பொழுது ஆகையால் ஆங்கிலேயர் தரும் (உயிர்ப்) பிச் சையை வாங்கிக் கொள்ளுங்கள்," என்றார்.

"எனது மக்களின் மனதிலே ஈமான் (நம்பிக்கை) இருக்கும்வரை, தேச பக்தி கொஞ்சமாவது இருக்கும்வரை எனது வாள் ஒரு நாளும் முறியப்போவதில்லை. அது என்றாவது ஒரு நாள் லண்டன் வாயிற்படியை அடைவது திண்ணம்" என பதிலுரைத்தார். சக்ரவர்த்தி பாதுஷா பஹ தூர்ஷா கூறிய உறுதியிலே ஒரு அளவாவது நம்முடைய இதயத்தில் இருக்குமானால், அவர் சொன்னது நிறைவேற வெகு காலம் ஆகவேண்டியதில்லை.

அவன் எங்கே

செழியன்

★

அன்று ஆங்கிலேயன், கனவுகூடக் கண்டிருக்கமாட்டான். "நாம் இப்பரந்த உபகண்டத்தை நூற்றுக்கணக்கான, வருடங்கள் ஆட்சி புரிவோமென்று. ஏனெனில் அன்று அவன் வெறும் மூட்டைதூக்கி வியாபாரியாக, "அன்னைபாரதமாதாவின்" முதுகிலே நடமாடித் திரிந்த காலம். அவனுக்கென்ன இந்த பூமியிலே யார் அரசாட்சி செய்தாலும், வேண்டியது வியாபார வசதிகள்தானே?

ஆனால் "அன்னை பாரதமாதா"வின் விதி வேறு விதமாக இருந்தது. ஆம்! அண்டிப்பிழைக்கவந்த ஆங்கிலேயன், அரசாள ஆரம்பித்துவிட்டான்- அது அவன் திறமையல்ல. தேசிய வீரர்கள் கூறுவதுபோல், "அது அவள் விதி!" என் இருக்கக்கூடாது? அவள்தான் அகிலம்புகழும் அசோக மன்னனையும், அரசன் என்ற பெயருக்கே முன்மாதிரியாய் அமைந்த 'அவுரங்கஜேபையும், 'தீரன் திப்புவையும்' சேரன் செங்குட்டுவனையும், பெற்றெடுத்த அதே வயிற்றில் அயோக்கியன் அமீன் சந்தையையும், பூசாரி பூர்ணையாவையும் கூடப் பெற்று விட்டாளே.

தீரன் திப்புவைக்காட்டிக் கொடுத்துக் கழுத்தறுத்த துரோகி "பூர்ணையாவைப்பற்றி" வாசகர்கள் அறிந்திருக்கலாம். ஆனால் இந்த "அமீன்சந்த்" யார்? பலருக்கு இவனைப்பற்றித்தெரியாது. ஏனெனில் இன்றையத் தமிழ் நாட்டின் சரித்திராசிரியர் எவரும் இவனைப்பற்றிக்

கூறத் துணியமாட்டார். ஏன் அவர்களுக்குத்தான், பத விக்காசைப்பட்டு, பகைவனுக்குத் தனது இனத்தவனைக் காட்டிக் கொடுத்த "மீர்ஜாபர்" இருக்கிறனே. அவனைப் பற்றிய வசைபுராணம் எழுதவே, இச்சரித்திராசிரியனது பேனவிலுள்ள மையெல்லாம் தீர்ந்துவிடுமே. அப்புறம் 'அமீன் சந்தை'ப்பற்றி எங்கே எழுதுவது.

அன்றுநாட்டிலே, ஆங்கிலேயனின் நடையுடை பாவனைகளையும், இஸ்லாமியருடையதைப்போன்ற கட்டுப்பாடான இன உணர்ச்சியையும் கண்டு ஒரு கூட்டம் ஆனந்தித்தது. "ஆயிரக்கணக்கான வருடங்களாய். நம்மால் ஏய்த்துச் சுரண்டப்பட்ட மக்கள்; என்று இஸ்லாமியன் இப்பூமியிலே கால்வைத்தானே, அன்றிலிருந்தே—நாள்தோறும், நூற்றுக்கணக்கிலே சென்று அவன் மதத்தைத் தழுவி, நமது பிழைப்பிலே மண்ணைப்போடுகின்றனரே என்று ஏங்கியிருந்த கூட்டம், எத்தனையோ வழிகள் மூலம் முயன்றும் இஸ்லாமியனை இந்தியமண்ணிலிருந்து விரட்டமுடியாது என்று கண்டு சோர்வடைந்து போயிருந்த கூட்டம்; அன்று ஆனந்தித்தது. கட்டுப்பாட்டிலே தலைசிறந்து இருந்த இஸ்லாமிய இனமும், தனது கட்டுப்பாட்டை இழந்து பல பிரிவுகளாகப் பிரிவுபட்டுக் கொண்டிருந்தது. வேறென்ன வேண்டும் அக்கும்பலுக்கு. அதுவும் சமயம் எதிர்நோக்கியிருந்தது வங்கத்திலே இஸ்லாமிய ஆட்சியை ஒழித்து, இங்கிலாந்தின் ஆட்சியை நிலைநாட்டுதற்காக. அந்த விஷ ஜந்துக்களிலே ஒன்றுதான் "அமீன் சந்த்." வங்கத்திலே ஆங்கிலேயனின் ஆட்சிக்கு அடிகோலியவர்களிலே முதன்மையானவனும் இவனே. வங்கம் பெற்றெடுத்த சிங்கம் 'சிராஜுத்தௌலா" வினது மந்திரி மீர்ஜாபர். சுற்றத்தானும்கூட. அவனது ஆப்தநண்பன் 'அமீன் சந்த்'

அவனுக்குமட்டுமல்ல, கிளைவுக்கும்கூட. கேட்கவா வேண்டும்.

சதியாலோசனை பலமாய் நடந்தது. அமீன் சந்துக்குப் பல லக்ஷக்கணக்கான தங்க நாணயங்கள் வேறு கொடுப்பதாக 'கிளைவ்' ஒப்புக்கொண்டான். எப்படியாவது 'மீர்ஜாபரை' வசப்படுத்திவிட வேண்டுமென்பது அமீன்சந்துக்கு கிளைவ் இட்ட ஆக்ஞை. "மீர்ஜாபரோ" உடன்படுவதாயில்லை. தனது இனத்தவன்; அதுவும் தனது சுற்றத்தானுகிய ஒருவனைக் கொலைசெய்து விட்டுத் தான் சிம்மாஸனமேறுவதா? மேலும், நிர்வாகத்திலும் நம்மைவிட 'சிராஜ்' எவ்வளவோ மேலானவனல்லவா? செச்சே, இந்தவழிக்கெல்லாம் நாம் போகவே கூடாது! என்றும், இன்னும் பலப்பலவும் யோசனை செய்தது அவன் மனம். ஆனுல் 'அமீன் சந்த்' என்ன அவ்வளவுதிறமை யற்றவனு? அப்படியானுல் 'கிளைவ்' அவனை நம்பித் தனது காரியத்தை ஒப்படைத்திருக்க மாட்டானே!

"ஜாபர்! இதோபார். உனது இனத்தவனுக்கு எப்படி துரோகம் ஆகும்? ஆங்கிலேயனே வெறும் வியாபார உரிமைதான் கேட்கிருன். அவற்றைக் கொடுப்பதால் நமக்கென்ன நஷ்டம்? நமது அரசாங்கத்துக்குத்தானே வருமானமெல்லாம். இது தெரியாமல் 'சிராஜ்' தான் தோன்றித்தனமாய் நடக்கிருன். அவனுக்கு நிர்வாகத் திறமையும் போதாது. நாட்டிலே பெரும்பான்மை யானஹிந்துமக்கள் அவன் ஆட்சியையும் வெறுக்கின்றனர். மக்களாகப் புரட்சி செய்து மன்னனைக் கொன்றுவிட்டால் பின்பு அவர்களுக்கிஷ்டமுள்ளவனைத் தானே அரசபீடத்தில் அமர்த்துவார்கள். அதற்குள் நீயே நல்ல முறையில்

நான் கூறுவது போல் செயலாற்ற முற்படுவாயானல் 'சிரா ஜுக்கு'ப்பின் நீதான் வங்கத்தின் மகுடமன்னன். உன்னை மன்னனுக்கி எனது கண் குளிரக்காணவேண்டும், என்ற ஆவலைவிட, உண்மை நண்பன் என்ற முறையில், எனக்கு வேறெதுவும் உள்ளத்தில் இருக்கமுடியுமோ? யோசித் துப்பார் ஜாபர். 'சிராஜுக்கும்' கொஞ்சகாலம் ஆட்சியி லிருந்து ஓய்வளிக்கலாமே! யுத்தத்தில் தோற்கும் சிராஜை எங்காவது நல்ல வசதிகளுடன் கூடிய ஓர் இடத்தில் பந் தோபஸ்தாக வைத்துவிட்டால் போகிறது. நாம் என்ன அவனைக் கொன்றுவிடவா போகிறேம்!" என்ற அமீன் சந்தின் வார்த்தைகள் 'மீர்ஜாபரை' என்ன வெல்லாமோ செய்தன. ஆசை என்றபேய் அவனது உள்ள உறுதியை கொஞ்சம், கொஞ்சமாக மருட்டி வெருட்ட வாரம்பித் தது. அவனும் மனிதன்தானே:— ஆஹா வங்கத்தின் வருங் கால அரசன் நான். எனது ஆட்சியைப்பற்றி சரித்திராசிரி யர்கள் எவ்வளவு புகழ்ந்து எழுதுவார்கள்? ஏன்? நான் தான் ஹிந்துக்களும் முஸ்லீம்களும், சேர்ந்து விரும்பக் கூடிய அரசனுக மாறப்போகிறவன். வாஸ்தவம்தான். அமீன்சந்தோ நமது உயிர்த்தோழன். அவனுவது நமக்குத் துரோகம் செய்வதாவது................

" சரி. அமீன்சந்த்! உனது திட்டப்படியே காரியங் கள் நடைபெறட்டும். ஆனல்...........! ஒன்று. 'சிரா ஜின், உயிருக்கு எந்தவிதமான ஆபத்தும் நேரக்கூடாது தெரிந்ததா?" இவைதான் ஜாபரின் வாயிலிருந்து, பலவித மான எண்ண அலைகளுக்கிடையே கடைசியாக வெளிவந்த வார்த்தைகள்.

காரியங்கள் மளமள வென்று நடக்க ஆரம்பித்து விட் டன. எந்தவகையிலாவது, 'சிராஜை' வம்புக்கிழுக்க

வேண்டும்; அதன்பின் கிளேவின் தலைமையிலுள்ள ஆங்கில இந்தியக் கூட்டுப்படை வங்கத்தில் நுழையவேண்டும். ஜெயத்தைப்பற்றிக் கேட்கவாவேண்டும்! நாட்டிற்குள்ளேயே அமீன் சந்தின் பூனூல்படை யொன்று காத்துக்கொண்டிருக்கிறது. இவ்வித சூழ் நிலையிலே, அவர்கள் எதிர்பார்த்த சமயமும் சீக்கிரமே வாய்த்தது. சுங்கம் கொடாது, வேண்டுமென்றே கள்ளத்தனமாக வியாபாரம் செய்த,வெள்ளையனின் கூட்ட மொன்றை 'சிராஜின்' உத்தியோகஸ்தர்கள் கைது செய்தனர். வதந்திகள் பரப்பப்பட்டன. 123 பேர் ஒரு சிறிய இருட்டறையிலே அடைக்கப்பட்டதாகவும், ஒரு சிலரே இறக்காமல் மிஞ்சியதாகவும், மீதி எல்லோரும்,காற்று வசதியில்லாத இடத்தில் அடைக்கப்பட்டதால் மூச்சுத்திணறி இறந்ததாகவும். செய்திகள் வெகுவேகமாக சிருஷ்டிக்கப்பட்டு வெளிக்கிளப்பப்பட்டன. வேறென்ன காரணம் வேண்டும், ஒரு நாட்டினர் இன்னொரு நாட்டினர்மீது படையெடுக்க?

எதிர்பார்த்தபடியே "பிளாசி" யிலே யுத்தம் மூண்டது. கோரமான யுத்தம்தான். "சிராஜ் உத்தௌலா" வே படைகளுக்குத் தலைமைதாங்கிப் போரை நடத்ினர். சேனதிபதி 'மீர்ஜாபரோ' தூரத்திலிருந்த ஓர் குன்றின்மீதிருந்து யுத்தத்தின் போக்கை கவனித்து வந்தான். அவனுடைய மனதிலே, பலவிதமான போராட்டங்கள். பல மனக்கோட்டைகள். யுத்தம் எப்படியும் 'சிராஜின்' தோல்வியில்தான் முடியும் என்பது தெரிந்ததே! தோற்ற சிராஜை என்ன செய்வது ?

ஆம், என்ன செய்வது ? இதைப்பற்றிய முடிவு வேறோர் இடத்திலே தயாராகிக்கொண்டிருப்பது அவனுக்

கென்ன தெரியும். யுத்தத்தின் ஓர் மூலையிலே, அமீன்சந்த் மீர்ஜாபருடைய மூத்த மகனுக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிருன். தம்பீ! உன் தகப்பன் நவாப்பாஞல் உனக்குத்தானே கௌரவம். நீ இளவரசன் என்ற முறையிலே, எவ்வளவு சொகுஸான வாழ்க்கை நடத்தலாம். உனது தந்தைக்குப்பின் நீயே வங்காளத்தின் அதிபதியாகப் போகிறவன். இதற்கெல்லாம் தடையா யிருப்பவன், சிராஜ் ஒருவன்தான். அவன்மட்டும் யுத்தத்தில் தோற்றும்கூட உயிரோடிருந்தால், எந்த நிமிஷத்திலும், உங்களுக்கெதிராக மறுபடியும் படைசேர்த்துக்கொண்டு புரட்சி செய்தாலும் செய்வான். ஆதலால் அவனைத் தொலைத்துவிடு. யோசியாதே. சீக்கிரம்செல்!'' என்று

"சிராஜ் உத்தௌலா' எவ்வளவோ வீரமாகத்தான் போரிட்டார். போரிட்டு என்ன செய்வது? வீரத்தை விட சூழ்ச்சியே பலமாக வேலை செய்தது. மேலும் சிராஜ், யுத்தத்தை எதிர்பார்த்து வேண்டிய முன் ஏற்பாடுகளைச் செய்யவில்லை. சூழ்ச்சி வென்றது. வீரம் தோற்றது. "பிளாசி'' யுத்தம் ஆங்கிலேயனுக்கு 'அன்னைபாரதமாதா' வின் ஓர் பகுதியிலே இடம் தேடிக்கொடுப்பதுடன் முடிவடைந்தது. யுத்தத்தில் தோற்று ஓடிய 'சிராஜை' மீர்ஜாபரின் மகன் மறைந்திருந்து கொன்று விட்டான். இஸ்லாமியனை, இஸ்லாமியனே, தனது சுயநலத்திற்காகக் கொலை செய்யும் மற்றொரு சோகநாடகமும் இஸ்லாமிய சரித்திரத்திலே நடந்தேறிவிட்டது.

"எண்ணியது எண்ணியபடியே முடிந்து விட்டது. இனி "மீர்ஜாபருக்கு" பட்டம் சூட்டவேண்டியதுதானே. பட்டாபிஷேகவைபவமும் வெகுசிறப்பாக நடந்தேறியது.

தன்னை அரசனாக்கிய ஆங்கிலேயனுக்குப் பரிசாக '24 பர்காணுக்கள், மீர்ஜாபரால் கொடுக்கப்பட்டன. ஆனால் ஜாபருக்கு ஒரே ஒரு மனக்கலக்கம். அந்தக்கலக்கம், அவனுக்குப்பட்டம் சூட்டிய கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே பைத்தியம் பிடிக்கவைத்து விட்டது. பைத்தியம் முற்றவுமே, ஆட்சிக்கு அவன் லாயக்கில்லை என்பதாக, ஆங்கிலேயர்களால் தள்ளப்பட்டு, அவனுடைய மருமகன் "மீர்காஸிம்" அரசனாக்கப்பட்டான். மீர்ஜாபருடைய மகன் எங்கே? சரித்திராசிரியர்கள்தான் பதில்கூற வேண்டும்.

"மீர்காஸிமும், ஆங்கிலேயனுக்கு அனுசரணையாய் இல்லையென்ற காரணத்தால், நாட்டைவிட்டு சீக்கிரமே துரத்தப்பட்டார். ஆம்! இந்த அமீன்சந்த் எங்கே? அவனுக்கு 'கிளைவ்' தான் கூறியபடி ஏராளமான தங்கக் காசுகளைக் கொடாமல் ஏமாற்றி விட்டானென்பதுதான் எல்லோருக்கும் தெரியுமே! ஆனால் அவன் எங்கே? வங்கத்தின் சரித்திரத்திலே துரோகி நெ. 1. என்று பொறிக்கப்பட்ட அமீன்சந்த் எங்கே?

சரித்திராசிரியர்களே பதில் கூறுவீர்களா?

* ஓமித்சந்த், என்றும் சில சரித்திராசிரியர்கள் இவனைக்குறிப்பிட்டிருக்கின்றனர்.

காரணம்?

V. N.

'நான் கூறிய பத்தியத்தை மீறி மாங்காய் ஊறு காய் தின்று விட்டார். அது மருந்தை முறித்து மாணத்திற்கு ஆஸ்பதமாயிற்று' என்று வைத்தியர் வயிரவப்பத்தர் கூறினர்

'தலைவலியோடு தண்ணீரிலே குளிக்கலாமோ? அதுதான் ஜன்னியைக் கொண்டுவந்துவிட்டது' என்று தந்தையார் சாம்பசிவம் பிள்ளை கூறினர்.

'காய்ச்சலோடு காய்ச்சலாய் காதல் விளையாட்டுவேறு செய்து விட்டான் சார்!' என்று நண்பன் நடராஜன் கூறினன்.

'கஷ்டமான காலத்திலும் கள்ள மார்க்கட் செய்தான். அதுதான் கடவுள் அவனைக் காலாகாலத்திலே தொலைச்சுப்பிட்டான்' என்று பாதிக்கப்பட்ட பாலகிருஷ்ணன் கூறினன்.

பக்கத்து வீட்டுக்காரன் பணம் கொடுத்தால் தன் வீட்டில் இருக்கும் சோதரனையே அடித்துக் கொல்லும் சண்டாளன் தொலைந்தால் யாருக்கென்ன நஷ்டமய்யா' என்று எதிர்வீட்டு எசக்கியா பிள்ளை கூறினர்.

'என்னமோப்பா இருந்தவரைக்கும் நல்ல பிள்ளைதான் கொஞ்சம் இங்கிதம் தெரியாது அவ்வளவுதான்' என்று மறித்தோருக்கு மரியாதை காட்டும் மாணிக்கம் சேர்வை கூறினர்.

இதெல்லாம் கடுமையான காய்ச்சலால் காலமான கந்தசாமியைப்பற்றி அவன் ஊரார் நிகழ்த்திய உரையாடல்.

இம்மாதிரியேதான் ஆந்திரகேசரி பிரதமர் பிரகாசம் காருவின் மந்திரிசபையின் முடிவு நிலை பற்றியும் பேச்சுகள் நடக்கின்றன.

'தமிழ் நாட்டினர் ஆதாவிலே பிரத மந்திரியானவர் தமிழ் நாட்டிற்கே உலைவைக்க நினைத்தார்' என்று கூறுவோரும் 'கழகத்தாரின் கலைச்சொற்களைப் புறக்கணித்தார். கவிழ்ந்தார்' என்போரும்,

'உண்ணுவதற்கு வகையற்ற மக்களை உடுத்துவதற்கும் வகையற்றுப் போக, ஐந்து முழத் துணி வழங்கிய அருட்கொடையாளர் ஆட்டம் கண்டாரா?'

என்போரும் சென்னை மாகாணத்தின் செல்வ நிலையையே குலைக்கும்.

மில் ஒழிப்புத் திட்டம் கொண்டுவந்து மிரட்டிய தீருக்குத் தானே எதிர்ப்பு என்று கூறுவோரும், தமிழன் ஒற்றுமையின்மையால் தவித்த காலத்திலே நூற்றித் தொன்னூற்றுறு ஓட்டுக்களில் எண்பத்திரண்டு ஓட்டுக்கள் மட்டும் பெற்றுப் பிரதமமந்திரியானல் எக்காலும் நிலைத்துவிடுமா இப்பதவி? என்று புள்ளி விபரம் கொடுப்போரும் எதேச்சாதிகார வெறிபிடித்த ஏகாதிபத்தியங்களும் நாணும் வகையில் அவசரச் சட்டம் கொண்டுவந்து அமுல் நடத்திய அமைச்சர் பெருமானுக்கு அழிவே வாராதிருக்குமா? என்று கூறி மக்கள் உரிமை கோருவோரும் இன்று மாகாணத்தில் மிகுந்துள்ளனர்.

இதற்கிடையே 'என்னமோ அவர் மிகவும் நல்லவர்தான். பெரிய அறிஞர்தான். இருந்தாலும் விதியாரைவிட்டது? ஏதோ அவர் பொல்லாக் காலம்' என்று அனுதாபப்படுபவர்கள் ஆந்திராவிலாவது இருக்கத்தான் செய்கிருர்கள்.

பொதுவாகவே மக்களுக்குத் துன்பமும் தொல்லையும் கொடுத்த காரணத்தாலோ தமிழர்க் குரியன செய்யத் தவறியதனலோ மாகாண நலனை மறந்ததனலோ மட்டும் மந்திரி சபை ஆட்டம் கண்டது என்பதற்கில்லை.

இந்த மந்திரி சபை அமைக்கப்பட்ட அன்றிலிருந்தே மாற்றமைப்புக்காண மார்க்கங்களைக் காண முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு வரத்தான் செய்தன.

முத்துரங்கமானல் என்ன, பிரகாசம் ஆனல் என்ன என்று கருதி அன்று நடுநிலைமையிலிருந்த தமிழ்நாட்டு அங்கத்தினர்களில் சிலர் காலமெல்லாம் நடு நிலையில் இருக்க முடியவில்லை. இருக்கவும் முடியாதுதானே! யாருடன் ஒற்றுமை உடன்படிக்கை செய்து கொள்வது, என்ற பிரச்சினைகளும் எழத்தான் செய்தன! முடிவு இம்மாதிரி ஏற்பட்டது. இன்றைய முடிவுக்கு மக்கள் காரணம் என்று கூறுவதைவிட மாகாண சட்ட சபை அங்கத்தினர்களின் மனநிலை காரணம் என்ருல் மிகப் பொருந்தும்.

இடிந்த கோட்டை

நூர்

●

"இன்றோ நாளையோ இறந்துவிடுவேன். என்னை மண முடித்து தாங்களும் ஏழுவருடங்களைப் பொறுமையாகக் கழித்து விட்டீர்கள். இதற்குள் நான் ஏதாவது தங்கட்கு பிழை புரிந்திருந்தாலும் மன்னித்து விடுங்கள். என்னை எக்குறையுமில்லாமல் போஷித்து வந்தீர்கள். எனக்குள்ள குறை எல்லாம் நாம் கொஞ்சுவதற்கு ஒரு குழந்தையில்லையே என்பது ஒன்றுதான். தாங்கள் இரண்டாவது தாரம் கொண்டிருந்தாலும் ஒரு குழந்தை பிறந்திருக்கும். என்ன செய்வது நமக்கு அவ்வளவுதான் அமைப்புப் போலும்!" என்று நிமோனியா காய்ச்சலால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஜெமீலா தன் கணவன் கமருத்தீனிடம் கூறினாள். கமருத்தீன் கண்ணீர் வடித்தான்.

ஆனால் அம்முறை ஜெமீலா குணமடைந்தாள். கமருத்தீன் கவலை தெளிந்தான். காய்ச்சல் தெளிந்ததிலிருந்து, தான் வைத்துக் கொஞ்சுவதற்கு ஒரு குழந்தை வேண்டும் என்ற அவாமிருந்தது.

இந்த ஏழுவருஷங்களில் கமருத்தீனும் ஜெமீலாவும் செல்லாத ஆஸ்பத்திரி கிடையாது. சாப்பிடாத மருந்து கிடையாது. ஒன்றும் பயன்தரவில்லை. இரண்டாந்தாரம் செய்துகொள்ள அவன் எண்ணியதுகூடக் கிடையாது. விதியின் முடிவால் ஒரு வேளை ஜெமீலா இறந்தாலும் தான் ஒரு ஷாஜஹானாகவே வாழமுடியும் என்று கருதிவிட்டான்.

காய்ச்சலிலே தெளிவடைந்த ஜெமீலாவிற்கு மற்றோர் வியாதி பீடித்தது. அதுமனோ வியாதி. எதிர்வீட்டுக் குழந்தையையோ அல்லது எதாவது ஒரு குழந்தையை யோ கண்டால் இவள் பெருமூச்சு விடுவாள். மறுகணம் மயக்கமுற்றுக் கீழே விழுந்து விடுவாள். இது 'இஸ்டீ ரியா' என்று டாக்டர்கள் கூறினார்கள்.

முடிவாக ஜெமீலா வெற்றி பெற்றுவிட்டாள். தனக் குத் தூரபந்துவான ராபியா எனும் ஏழைப்பெண்ணை இரண் டாம் தாரமாகக் கொள்ள கமருத்தீனைச் சம்மதிக்கச் செய்து விட்டாள். கமருத்தீனுக்கு இது முழுதும் பிடித்த மில்லா திருந்தது என்றாலும் இதிலேதான் ஜெமீலாவின் மகிழ்ச்சி இருக்கிறது என்றால் எப்படி அதை மறுப்பது?

ராபியாவின் அழகு-இளமை நற்குணங்கள் யாவும் தோல்வியடைந்த இடத்திலே ஜெமீலாவின் கொஞ்சுத லான கோபப்பார்வை வெற்றிபெறும்.

ஆம்! ராபியாவிடம் உரையாடுதல் நட்பாயிருத்தல் எல்லாவற்றையும் ஜெமீலாவின் விருப்பத்திற்காகவே செய்துவந்தான்.

ராபியாவிற்குத் தலைவாரி விடுதல், அவளின் அறையை அழகு செய்தல், இரவிலே பக்குவமாகப் பால் காய்ச்சி அனுப்புதல் இவ்வேலைகளில் முனைந்துவிட்டாள் ஜெமீலா.

தன்னைத்தானே வேலைக்காரியாக்கிக் கொண்ட ஜெமீலா இன்னும் தனக்கு அரசியாக இருக்கவேண்டும் என்று விரும்பும் கமருத்தீன் ஏதாவது ஒரு சமயங்களில் 'ஜெமீலா! நீ எனக்கு மனைவி என்பதை மறந்துவிட்டாயா?' என்று கேட்பான், அது ஒரு ஆழமான வேண்டுகோள்.

'மறக்கவில்லை ஏழு வருஷங்களாக ஆண்டு அனுப வித்த எனக்கு மட்டுமல்ல-இன்றே வந்துள்ள ராபியாவிற் கும் நீங்கள் கணவர் என்பதை நான் மறக்கவில்லை' என்று சுடச்சுட பதில் கொடுப்பாள். தோல்வியடைந்த கமருத் தீனுக்கு ராபியாவின் அறை புகலிடம் தரும்!

ராபியா மணமுடித்த ஆறுமாதங்களில் ஒரு புதுப் பொலிவுடன் காட்சியளித்தாள். அடிக்கடி வாட்டும் வாந்தி எடுப்புக்கூட அவள் முகப்பொலிவை மாற்றவில்லை. ஜெமீலா முகத்திலே இளமையும்-அகத்திலே கிழமையும் பெற்று வந்தாள்.

தாயற்ற ராபியாவிற்குத் தாய் ஸ்தானத்திலிருந்து கவ னித்து வருவதுடன் பிறக்க விருக்கும் குழந்தையிடம் எவ்வாறு தாய்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற சிந்தனையும் அபாரமாகிவிட்டது.

கமருத்தீன் சில சமயங்களில் சிரித்துவிடுவான். நாலு மாதக் கர்ப்பத்திலிருக்கும்பொழுதே மருந்தூட்டும் சங்கு, பனிக்குல்லாய், கிலுகிலுப்பை இவைகளைச் சேகரம் செய் வதைப்பார்த்தால் யாருக்குத்தான் சிரிப்புவராது.

தன்னுடைய பலஹீனமான உடல் நிலையிலே அதிக மான பொறுப்பெடுத்து வேலைகள் செய்துவந்த ஜெமீலா மீண்டும் ஜுரத்தால் பீடிக்கப்பட்டாள். சரியாக ஒரு மாதம் படுக்கையாய்ப் படுத்துவிட்டாள்.

வரவர அவள் உடல் நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. ராபியாவும் எவ்வளவோ பாடுபட்டாள். பல சமயங்களில் ஜெமீலா பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே தேம்பித் தேம்பி அழுதுவிடுவாள். 'ராபியாவை அருகே

அழைத்து அவளது தலையைக் கோதிக்கொண்டே ஆறுதல் கூறி அவளைச் சமாதானப்படுத்துவாள் ஜெமீலா

"பயப்படாதே! ராபியா! நான் என் குழந்தையைக் கண்ணால் கண்டு அணைவளர்த்து அதற்கும் கல்யாணம் முடித்துவிட்டுத்தான் சாவேன்" என்று கூறுவாள்.

ராபியாவின் தகப்பனார் ஜெமீலாவின் உடல் நிலை மோசமாக இருப்பதால் ராபியாவைத் தங்கள் வீட்டிற்கே பிரசவத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பினார்.

ஆனால் ஜெமீலா கண்டிப்பாக மறுத்துவிட்டதால் ராபியாவின் பிரசவம் கமருத்தீன் வீட்டிலே நடந்தது.

முதல் பிரசவமானதால், லேடிடாக்டர், மருத்துவச்சி (Midwife) முதலிய முன்னேற்பாடுகள் தடபுடலாகச் செய்யப்பட்டிருந்தன.

இரண்டு நாள் படுமோசமான பிரசவ வேதனைக்குப் பிறகு ராபியா ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். வீட்டின் மாடியிலே நடமாடமுடியாத நிலையில் படுத்திருந்த ஜெமீலாவிடம் குழந்தையைக் காட்டினார்கள். நல்ல சிகப்பு நிறமும் அழகும் பொருந்தியவள் ராபியா. ஆனால் அவள் குழந்தை ஜெமீலாவைப் போல் சிறிது கருப்பாகத் தான் இருந்தது.

கஷ்டமான பிரசவத்திற்குப் பிறகு கடுமையான ஜுரம் கண்டது. டாக்டர்கள் என்ன ஜுரம் என்ற ஆராய்ச்சியி லீடுபட்டனர். ஜெமீலாவிற்கு ஏற்பட்டிருக்கும் நிமோனியாதான் ஒட்டிக்கொண்டது என்றும், இல்லை இல்லை இது கர்ப்பாசயப் புண்ணால் ஏற்பட்ட ரணக்காய்ச்சல் (Septic Fever) என்றும் வாதிட்டுக் கொண்டிருக்கும் அவர்கள் தெளிவடையவே இல்லை.

ஆம்! ராபியா பிரசவித்த மூன்றும் நாளே இறந்து விட்டாள்.

ராபியா இறந்து விட்டால் அது ஜெமீலாவிற்குத் தெரியக்கூடாது என்று எல்லோரும் முடிவுகட்டி ராபியா இறக்கும் தருவாய்க்கு முன்னதாகவே அவளை அவள் தகப்பன் வீட்டிற்கு எடுத்துச் சென்றுவிட்டனர்.

அச்செய்தி ஒன்றே ஜெமீலாவையும் கொன்று விடும் என்று நினைக்கும் அவ்வளவு பலஹீனமாகவே இருந்தாள் ஜெமீலா!

ஜெமீலாவிற்குத் துணையாக ஒரு நர்ஸ் மட்டுமே இருந்தாள்.

தன் வீட்டின் கீழே எவ்வித சப்தமும் கேட்காமல் மிக அமைதியாக இருந்தது ஜெமீலாவிற்கு ஆச்சர்யத்தை அளித்தது.

அத்துடன் ராபியாவின் குழந்தை பசித்து அழுதது. ஆம்! அக்குழந்தையும் ஜெமீலாவுடன்தான் இருக்கிறது!

நர்ஸ் குழந்தைக்கு பீடிங் பாட்டில் மூலம் (Feeding Bottle) பாலூட்டினாள்.

'ஏன் ராபியாவிடம் கொண்டுபோய் கொடுத்து பாலூட்டி வருகிறதுதானே? என்று ஜெமீலா கேட்டாள். நர்ஸ் கண்கள் கலங்கின, எனினும் எப்படியோ மறைத்து விட்டாள்.

"இல்லை இப்பொழுதே இருந்து பசுவின் பாலூட்டிப் பழக்கினால்தான் பிறகு தாய்ப்பால் இல்லாவிட்டாலும் குழந்தை பசுவின்பாலை ரப்பர் மூலம் சாப்பிடும்' என்று நர்ஸ் பதில் அளித்தாள்.

சிறிது நேரம்சென்றதும் "நர்ஸ்! நான் கொல்லைக் குப்போகவேண்டும்' என்றாள் ஜெமீலா.

நர்ஸ் அவளை மெதுவாகத் தூக்கி பக்கத்தேயிருந்த நாற்காலிக் கக்கூஸில் உட்காரச் செய்வதற்காகத் தாங்கு

தலாக அழைத்தவரும் பொழுது தெருவிலே ஒரு பெரிய கூட்டம் போவது தெரிந்தது. கூட்டத்தின் முகப்பிலே ஒரு சந்தாக்கு-கூட்டத்தின் பின்கோடியிலே கமருத்தீன் அழுது வீங்கிய முகத்துடன் சென்ருன்.

கூட்டத்திலே மெதுவாகக் கூறிச்செல்லும் 'அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு........' ஜெமீலாவின் காதில் நன்ருகக் கேட்கிறது!

எல்லா விஷயங்களையும் புரிந்துகொண்டாள் ஜெமீலா. அமைதியாகக் கால் கழுவிவிட்டுப் படுக்கையில் படுத்தாள்.

படுத்தது முதல் சிரித்துக்கொண்டே இருந்தாள். நர்ஸ் பலமுறை கேட்டும் 'உலகைப்பார்த்துச் சிரிக்கிறேன்' என்ற பதிலைத்தவிர வேருென்றும் கூறவில்லை.

நர்ஸ் கீழே இறங்கி வந்து கமருத்தீனுக்கு ஆள் அனுப்பினுள். கமருத்தீனும் வந்தான்.

'உலகைப்பார்த்தீர்களா? ஆண்டவன் உலகின் ஜீவன் களிடம் எவ்வாறு விளையாடுகிருன் பார்த்தீர்களா? பல முறை நோய்வாய்ப்பட்டும் ஒரே ஆசையால் உயிர்தப்பி வந்தேன். நான் வைத்துக் கொஞ்சுவதற்கு குழந்தை இல்லையே என்று ஏங்கினேன். ஆண்டவன் குயிலை அனுப்பிக் காக்கைக் கூட்டில் முட்டையிடச் செய்து விட்டான். காக்கை, குயிலின் முட்டையைப் பாது காக்கும்! ஆனுல் இக்காக்கையும் கூட்டைவிட்டுப் பிரியும் தருவாயிலிருக்கிறது. ராபியா! ராபியா! உலகில் என் கவியைத்தீர்த்து விட்டு நீ போய் விட்டாய். நீ போனபாதையில்தான் நானும் பிரயாணப்பட விருக்கிறேன்.

'இதோ என் குழந்தை! இனி எங்கள் ஞாபகச் சின்னம்' என்று அமைதியாகக் கூறியபடியே சிரித்த முகத்துடன் கண்ணை மூடிவிட்டாள் ஜமீலா. இப்பொழுது கமருத்தீன் வீட்டில் மும்தாஜ் எழுப்பும் 'அம்மா! அம்மா!' என்ற குரலுக்கு உலகிலே பதில் இல்லை.

குஷ்ட ரோகி

ரசூல்

●

என்றோ ஒரு நாள் அவனை நான் பார்த்த ஞாபக மிருக்கிறது. அவன் அன்று ஒரு நல்ல உழைப்பாளியாக ஓடியாடி வேலை செய்துக் கொண்டிருந்தான். அச்சமயம் அவனுக்கு இரண்டு மூன்று குழந்தைகளும், மனைவியும்கூட இருந்தனர். அவனுடைய குடும்ப நிலை, ஏழ்மையாகவு மில்லை; செல்வ நிலையிலுமில்லை. நடுத்தரமா யிருந்தது.

ஆனால், நேற்று எதிர்பாராதவாறு அவனை நான் கடை வீதியில் கண்டு திடுக்கிட்டு விட்டேன். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. அவன் எதிரியும் விரும்பாத கோர நோய்க்கு இரையாகி, கை, கால் விரல்கள் கரைந்து, மழுங்கிப் போய், முகமெல்லாம் வீங்கி, கண், காது, மூக்கு, உதடு எல்லாமே பருத்திருந்த நிலையிலிருந்தான். அவனுக்குக் குஷ்டரோகம் பிடித்திருந்தது; அவன் ஒரு குஷ்ட ரோகியாயிருந்தான்.

ஆச்சரியமும், அருவருப்பும் பொங்கிற்று எனக்கு. சில விநாடி என் கால்கள் நடவாது நின்று விட்டன. அவனுடன் பேசவேண்டு மென்றுதான் முயன்றேன். ஆனால் அவன் திரும்பி என்னைக் கூர்ந்து நோக்கி அருகில் வர முயன்றபொழுது, என் கால்கள் தாமாகவே விரைந்து நடக்க வாரம்பித்துவிட்டன. வெகு தூரம் செல்லும் வரையிலும் அவன் பக்கம் நான் திரும்பியும் பார்க்கவில்லை. அவன் என்னைக் கூர்ந்து நோக்கிய அந்தப் பரிதாபமான பார்வை என் உள்ளத்தை வாட்டி வதைக்க வாரம்பித்து

விட்டது. அவன் என்னிடமிருந்து ஏதோ பெற முயன்ற சமயம் விரைந்து வந்து விட்டேன். அவன் ஒரு குஷ்டரோகி; அவன் காற்றுகூட பிறர்மீது படக் கூடாதென்று பீதி எனதுள்ளத்தில் அச்சமயம் எழுந்ததே காரணம்!

நேற்றுமாலைவரை அவனுடைய அந்தப் பரிதாபமானத் தோற்றம் என் மனக்கண்முன் அடிக்கடி தோன்றி மறைந்த வண்ணமே யிருந்தது. நல்ல நிலையிலிருந்த அவனுக்கு எப் படி இந்த கொடிய வியாதி பிடித்துக் கொண்டது? அவ னுடைய குழந்தை குட்டிகளின்கதி என்னாயிற்று? அவ னது குடும்ப சம்ரட்சணை எப்படி நடக்கிறது, ஆக இப்படி யான கேள்விகள், அடுத்தடுத்து, ஒன்றின்பின் வொன் ருக எனதுள்ளத்திலே எழுந்து என் மன நிம்மதியை அலக்கழித்தன.

இதே யோசனையிலாழ்ந்த வண்ணம், இருந்த இடத் திலேயே வெகு நேரம் உட்கார்ந்துக் கொண்டிருந்தேன்.

* * * *

இன்றுகாலை எனது வீட்டு வெளித்திண்ணையி லமர்ந்து நானும், எனது இதர நண்பர்களும் காலை தினசரித் தாளை வைத்துக் கொண்டு பேசிக்கொண்டிருந்தோம். நண்பன் அப்துல் ரஹீம் பஞ்சாப் கிலவரத்தைப் பற்றி பிரமாத மாகப் பேசிக் கொண்டிருந்தான்; பீர் முகமத் அவன் சொல்வதற்கெல்லாம் பலமாகத் தலையாட்டிக் கொண் டிருந்தான்.- இதர நண்பர்களும், நானும் பொறுமையுடன் ரஹீம் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந் தோம்.

"அண்ணே!........என்ற ஒரு பரிதாபமான குரல் வந்த பக்கம், ஏக காலத்தில் எல்லோரும் திரும்பிப் பார்த்

தோம். நேற்று நான் பார்த்த அந்தக் குஷ்டரோகி, கையில் பிச்சை ஓட்டைத் தாங்கிக் கொண்டு எங்களருகில் வந்துகொண்டிருந்தான். அவன் முகம் வாட்டமடைந்திருந்தது; குரலில் சோகம் தொனித்தது.

"ஏய், அங்கேயே நில்லுடா! கிட்ட வராதே!........ என்று சீறினன் குஷ்டரோகியைப் பார்த்து அப்துல் ரஹீம். "சனியன், காலையில் எங்கே வந்து தொலைந்தே இங்கே! ...." என்று உறுமினன் பீர் முஹம்மத்.

"அண்ணே பசிக்குது அண்ணே! ஏதாகிலும் குடுத்தா நல்லாயிருப்பீங்க!........" என்று இழுத்தான் குஷ்டரோகி, என்மீது பார்வையைச் செலுத்தியவாறு. நான் அவனுக்கு அறிமுகமானவனென்ற எண்ணம் போலும்.

"பசித்தால் எங்கேயேனும் ஆற்றிலோ குளத்திலோ விழுந்து சாகவேண்டியதுதானே! நீ உலகிலே வாழ்வதே எதற்காக; கர்மம்! கர்மம்!"

இவ்விதம் பீர் முஹமத் கூறும் பொழுது குஷ்டரோகியின் கண்கள் கலங்கி விட்டன. நெடுமூச் செறிந்த வண்ணம் அவன் கூறினன். அண்ணே பாழும் ஆண்டவன் எதற்காக என்னை உயிருடன் வைத்திருக்கிறனே தெரியவில்லை; என்னை சாகவும் அவன் செய்யமாட்டேனென்கிறன். இப்படி கஷ்டப்பட்டுக் கொண்டு கேவலமாக...."

குஷ்டரோகி அதற்குமேல் பேசவில்லை. அவன் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு கண்ணீர் வடிக்க வாரம்பித்தான்.

"எல்லாம் செய்வினையப்பா! கர்மவினை யாரையும் சும்மாவிடாது. கொடூரமான வியாதிகளும், ரோகங்களும்

ஏற்படுவதற்குக் காரணமே அவர்களுடைய கர்ம வினை தான். எல்லோருக்கும் இந்தமாதிரியான ரோகங்கள் வந்து விடாது!"

அப்துல் ரஹீம் பெரிய தத்துவஞானிபோல் அருமையாக எல்லோரையும் பார்த்துப் பேசினான். ஏக்கம் நிறைந்த பார்வையுடன் குஷ்டரோகி அவனைக்கண்டு," அண்ணே! நீங்கள் சொல்வது 'மெய்யோ, பொய்யோ! ஆனால், நான் ஒரு பாவமுமறியாதவன்; முன்பு நல்ல விதமாகத்தானிருந்தேன். ஆனால், எப்படியோ இடையில் இந்த வியாதி என்னை தொத்திக் கொண்டது. நானும் என்னென்னமோ மருந்துகளெல்லாம் உபயோகப்படுத்திப் பார்த்தேன். ஆனால் இப்பொழுது இந்த நிலைக்கு உங்களுடைய அருவருப்பானப் பார்வைக்கு ஒருவாருக வந்து சேர்ந்து விட்டேன். எல்லாம் விதி! தலைவிதி!! என்றான். உஷ்ணமான நீண்ட பெருமூச்சு மீண்டும் அவன் நாசியினின்று வெளிப்பட்டது.

அவன் சொன்னதை யாரும் நம்புவதாகத் தெரியவில்லை. மிக அருவருப்பான குரலில் பீர் முஹம்மத் கூறினான்.

"எல்லாம் தெரியுமப்பா உன் பாசாங்கு! அடுத்த ஊர் அப்துல்லாஹ் ஏராளமாக வட்டிப்பணம் வாங்கிச் சேர்த்தான்; பல பேர் தலையில் கை வைத்துப் பொருள் சேர்த்து, அடடா அவன் செய்த அநியாயங்களும், அக்கிரமங்களும் அடேயப்பா! கடைசியாக அந்தப் படுகாலிப் பயல், உன்னைப்போலத்தான் குஷ்டரோகம் பிடித்துப் போய், நாயினும் கேவல நிலையில், நடுத்தெருவில் செத்துப் போனான். அந்தமாதிரிதான் நீயும் எங்கேனும், எதையாவது............"

அவன் கூறி முடிப்பதற்குள் குஷ்டரோகி ஆக்ரோஷத்துடன் குறுக்கிட்டு,'' அண்ணே ! நீங்கள் நினைத்தபடி நான் அப்படியொன்றும் செய்யவில்லை யண்ணே! பிறர் பொருளுக்கும் நான் ஆசைப்படவில்லை. உடல் வலிய உழைத்து உண்டு வந்தேன். இதோ இந்த அண்ணன் என்னை நன்றாய் அறிந்தவர். என்னைப்பற்றி அவரிடம் கேளுங்கள்'' என்று என்னைச் சுட்டி காட்டினான்.

"உண்மைதானா?'' என்று கேட்பதுபோல் எல்லோரும் என்னைப் பார்த்தனர். இவ்வளவு நேரம்வரை மௌனமாயிருந்த நான், குஷ்டரோகியைப்பார்த்து, என்னப்பா, எப்பொழுதிலிருந்து இந்த வியாதி உனக்கு?'' என்று கேட்டேன்.

"இரண்டு வருஷமாச்சு அண்ணே!'' என்றான் அவன்.

"உன் மனைவியும், குழந்தை குட்டிகளும் சௌக்கியமா?'' என்று நான் கேட்கும் பொழுது, "என்னப்பா உனக்கு இவனைப் பற்றி முன்பே தெரியும்போலிருக்கிறதே! முன்பு எப்படியிருந்தான் இவன் என்று கேட்டான் அப்துல் ரஹீம்.

புன்னகை புரிந்தவாறு நான் கூறினேன்.

"உனது தத்துவார்த்தப்படி இவன் இருந்ததில்லை. இரண்டு மூன்று வருடங்களுக்குமுன் இவனை நான் நன்கு அறிவேன். சிறந்த உழைப்பாளி. மனைவியோடும், இரண்டு மூன்று குழந்தை குட்டிகளோடும் நல்லவிதமாகத் தானிருந்தான். மீண்டும் நேற்று நான் இவனை இந்த நிலையில் கண்டு திடுக்கிட்டு விட்டேன். பாவம்! குஷ்டரோகியின் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?

நான் இவ்விதம் கூறும் பொழுது குஷ்டரோகி நன்றி யறிதலான, கனிந்த பார்வையுடன் என்னை நோக்கினுன். பிறகு அவன் என் கேள்விக்கு பின்வருமாறு பதில் கூறினுன்.

“அண்ணே! என் மீது அவ்வளவு அன்பாயிருந்த என் மனைவி என் நோய் முற்ற வாரம்பித்தும், என்னுடன் மிக அருவருப்பாக நடக்கவாரம்பித்தாள். மழுங்கிய என் கை விரல்களைக் கொண்டு நான் வேலை செய்ய சக்தியற்று போகும் தருணத்தில், அவள் ஒரு நாள், சொல்லிக் கொள்ளாமல் குழந்தைகளை யழைத்துக்கொண்டு எங்கோ ஓடிவிட்டாள். எனக்கு இவ்வுலக வாழ்வே கசந்துவிட்டது போலாகி விட்டது. குஷ்டம் என்னைப் பலமாகப் பற்றிக் கொண்டதும், சொந்த மனைவி மட்டு மல்ல; உற்ருர், உறவினர், நண்பர்கள் எல்லோருமே என்னைக் கண்டு வெறுக்கத் தலைப்பட்டனர். உலகின் எவ்வித சுகத்தையும் என்னுல் அனுபவிக்க முடியவில்லை. “பெரும் வியாதியஸ்தன்” என்று எல்லோருமே என்னைப் புறக்கனித்து ஒதுக்கித் தள்ளினர். நான் நடப்பதும், நிற்பதும், உட்காருவதும் கூட பலர் கண்டு அருவருக்கத் தொடங்கி விட்டனர் ஹோட்டல்களில் என்னைப்போ லொத்தவர்கள். உள்ளே நுழையக்கூடா தென்று கொட்டை எழுததுக்கள் கொண்ட பலகையை நான் காணும் பொழுதெல்லாம், இவ்வளவு வெறுக்கப்படும் இந்த ஆத்மா, ஏன்தான் உயிர் தரித்து வாழ வேண்டுமென்று விரக்தி கொள்வதுண்டு. இரக்கப்பட்டு பிச்சையிடுபவர்கள்கூட, அருகில் வராது, தூர நின்று காசை விட்டெறிகின்றனர். ஆண்டவனே! இவ்வளவு இழி நிலையில் என்னை ஏன் வைத்து வாட்டுகிருய்! நான்

செய்த குற்றம்தான் என்ன?'' என்று அவன் கூறும் பொழுது 'கோ'வென்று அழுதே விட்டான்.

என் மனம் என்னவெல்லாமோ எண்ணத் தொடங்கி விட்டது. அவனைச் சமாதானப்படுத்திவிட்டு, அவன் கையில் ஒரு எட்டணுவைக் கொடுத்து அனுப்பிவைத்தேன்.

அவன்போய்விட்ட பிறகு நண்பர்கள் அனைவரும் அவனைக் குறித்து என்றன்னமோ பேசிக்கொண்டார்கள். எவர் பேச்சிலும் அனுதாபமில்லை! இரக்கமில்லை. ஆனுல் நான் மட்டும் அவனைப்பற்றி வெகுநேரம் சிந்தித்துக் கொண்டேயிருந்தேன்.

அவன் ஒரு குஷ்டரோகிதான்; ஆனுல், அதற்காக அவன் உலகில் உயிருடன் வாழ உரிமையில்லையா? மரணம் அழிவு யாவருக்கும் இயற்கை! பின் எதற்காக குஷ்ட ரோகத்தைக் கண்டு குலை நடுங்க வேண்டும்? குஷ்டரோகம் பிடிப்பது கர்மவினையா? அப்படியானுல் இவன் செய்த கர்ம வினைதான் என்ன?

இவ்விதமாக வெகுநேரம் சிந்தித்து அலுத்து விட்டது எனக்கு கடைசிவரை என்னுல் முடிவைக் காணவே முடியவில்லை.

இரண்டு நாட்களுக்குப் பிறகு யாரோ ஒரு குஷ்ட ரோகி ரயிலில் அகப்பட்டு இறந்து கிடக்கிருன் என்ற சேதி, என் காதில் விழும்பொழுது, அவன்யார், என் இறந்தான், எப்படி இறந்தான், என்ன காரணமென்பதை நான் அறிந்து கொண்டேன். அதற்காக நான் துக்கப்பட வில்லை; மீண்டும் முடிவற்ற சிந்தனையிலாழ்ந்து விட்டேன்.

அப்பக்காரி

S. M. A.

கொழும்பு ஆபீஸ் ஒன்றில் குமஸ்தா வேலைசெய்து வந்த நான் 'நாராம்பிட்டி ரூேட்'டில் ஒரு தனி அறை அமர்த்தி அதில் வேலைவிட்டு வந்ததும் தங்கி வந்தேன். ஹோட்டலில், தயாராகும் காலை ஆகாரம் எனக்கு பிடிக்காதாகையால் சில நாட்களாய் நானே பலவிதமான ஆகாராதிகளை தயாரித்து சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்கு போவது வழக்கம். எத்தனை நாட்களுக்குத்தான் ஆணாய்ப் பிறந்த நான் ஆகாரம் சமைப்பது. அதிலும் அதிகாலையில் ஒரு நாள் ஆபீஸிலிருந்து நானும் என் நண்பர் ஜமாலும் வீடு நோக்கி விரைந்துகொண்டிருக்கும்போது சமையலால் நான் படும் உபத்திரவத்தையும், அதற்காக நான் அதிகாலையிலிருந்தே அவஸ்தைப்பட வேண்டியதையும் சொல்லி அதற்கொரு விமோசனம் தேடும்படி நண்பரை வேண்டினேன். அவர் "அப்படியானல் ஒரு பெண் இருக்கிருள் அப்பம், தோசை, இட்லி இவைகள் செய்து வீடுகள் தோறும் வழமையாய் விற்றுவருகிருள். அவளை உன் அறைக்கும் கொண்டுவர ஏற்பாடு செய்கிறேன். இஷ்டம் தானே" என்ருர். நானும் சிறிது யோசித்து சிரமம் ஒய்ந்தது என்ற முடிவில் "சரி நாளைக் காலை முதல் அப்படியே ஏற்பாடு செய்து விடுங்கள்" என்று அப்பத்திற்கு ஆர்டர் செய்து விட்டேன்.

மறுநாள் காலைக் கடன்களை முடித்துவிட்டு ஆகாரத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன். இடது கையில் ஏந்திய அப்பப் பெட்டியுடன் வந்த அப்பெண் "எவ்வள

வுங்க அப்பம்'' என்றாள். நான் என் தேவையைக் கூறியதும் இலையில் கட்டிய பொட்டலத்தை நீட்டிவிட்டுப் போய்விட்டாள். நான் புசித்துவிட்டு ஆபீஸுக்கு கிளம்பிவிட்டேன். மாலையில் அறைக்கு நான் வந்ததும் அப்பெண் வந்து "அப்பத்துக்கு காசு'' என்றாள். கொடுத்தேன். பெற்றுக்கொண்டு போய்விட்டாள். தினமும் விடாமல் இவ்விதமே இருமுறை அவளை நான் சந்திப்பது வழக்கமாய் விட்டது. அவளுக்கோ சுமார் 28 வயதிருக்கலாம். மாந்தளிர் நிறம், அகண்ட விழிகள், அழகிய அதரங்கள், நீண்ட கேசம், ஒரு நாள் காசு வாங்க வந்தவள் நான்கு வயது பெண் குழந்தை ஒன்றையும் தன்கூடவே கூட்டிக்கொண்டு வந்தாள். காசைப் பெற்றதும், போய்விட்டாள். அவள் போனதும் அவளைப் பற்றிய சிந்தனை கிளம்பியது. இளம் பெண் அப்பம் விற்கிறாள், தானே தினமும் தெருத் தெரு வாய் அலைகிறாள், அதிலும் சிறு குழந்தையும் இருக்கிறது இவளை ஆதரிப்பாரில்லையோ, கணவன் இறந்துவிட்டானோ, அல்லது இவள் ஒரு விபசாரியோ, வாய் பேசும் வம்பியோ இப்படியெல்லாம் சிந்தித்த நான் மறுநாள் மாலையில் அவளிடமே கேட்டு அவள் சரிதையை தெரிந்துவிடுவதென்ற முடிவுக்கு வந்தேன். வழக்கம்போல் மறுநாள் மாலையில் "அப்பக் காசு'' என்றாள் வாசலில் நின்றுகொண்டே.

"அம்மா நீ யார்? உன் சரிதையை நான் தெரிந்து கொள்ளலாமோ'' என்றேன். பாவம்! அவள் கண்களில் கண்ணீர் மல்கியது. சற்று முன் மலர்ந்த மலர்போல் காணப்பட்ட அவள் முகம் வாடி கண்ணீர் துளிகள் நிரம்பி ஓடின. "ஏம்மா அழுகிறாய் அழாமல் இஷ்டப்பட்டால் சொல்....'' என்று நான் முடிப்பதற்குள் அப்பக்காரி கூறினாள் :— "நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்த கொழும்புதானுங்க.

எங்க பாட்டன் பூட்டன் அத்தா அம்மா எல்லாம் நல்லா காசு பணத்தோடெதான் இருந்தாங்க. எங்க அத்தாவுக்கு நானும் என் அண்ணனும் இரு குழந்தைகள்தான். எங்கத்தா நான் சிறுசா இருக்கச்சே காலமா யிட்டாரு. ஆனா, புண்ணியவான் நடுத்தெருவுலே ஒண்ணும் விட்டிடலே. நாலஞ்சு காணி நில புலத்தோட, வீடுவாசலோடதான் இருந்தோம். எங்க அண்ணன் சிங்கப்பூருக்கு போனவன் வரவே இல்லே. எங்கம்மா நல்ல ஒரு ஆளுக்கு என்னே கலியாணம் கட்டவேண்டுமென்று அவுங்க அண்ணன் மகனுக்கு என்னே கலியாணம் பண்ணிக் குடுத்து எங்க வூட்டுலேயே வச்சிக்கிட்டாங்க. கொஞ்ச நாளு போயி எங்கம்மாவும் போயிட்டாங்க. நாங்க ரெண்டுபேருமா இருக்கயிலெ அவரு குடிச்சிப்பிட்டு வந்து வூட்டுலே ஆடுவாரு. வேசை வீட்டில் போயி ராவு நேரத்திலெ தங்கிப்புட்டு வருவாரு, என் மேலே பிரியமில்லாமே வள் வள்ன்னு சீறிவிளுவாரு. இந்தப்படி நடந்து வந்ததுலே குடும்பம் கலகலத்துப்போயி எனக்கும் அவருக்கும் இருந்த உறவே விட்டுப்போச்சு நான் எவ்வளவு புத்திமதியோ சொன்னாலும் அடி; உதை தானுங்க நான் வாங்கிக்கட்டனும். என் கெட்டகாலம் இந்த சண்டை சச்சரவுக் கிடையிலேயே பாருங்க அன்னக்கி நான்கூட கூட்டிக்கிட்டு வந்தேனுங்களே அந்தக் கொழந்தை பிறந்ததுங்க. இப்படிக் கொஞ்ச நாள் போச்சி. பிறகு கொழந்தைக்கி ஒரு வயசு வந்ததும் அந்தப் பச்சைப் பாலகனே புடிச்சி எங்கிட்டெ குடுத்துப்புட்டு அந்தப்பாவி மனுசன் எங்கேயோ ஓடிப்போயிட்டாரு. பச்சைக் கொழந்தையோட நான் என்னங்க செய்வேன். கெடந்த நெலபுலமெல்லாம் அந்த மனுசன் பொட்டலாக்கிப்புட்டாரு. அதுனாலே நான் உங்க, திங்க, உடுத்த ரொம்ப கஷ்டப்பட்டு அப்

பறமா யோசிச்சிப் பாத்தேன். இந்த வியாபாரத்தெ செய்யலாமுனு தோனுச்சு, மூனு வருச காலமா இந்த வியாபாரத்தை செஞ்சி கொழந்தையும் வளத்து என் வயத்தையும் கழுவிவாரேனுங்க. எதாச்சிம் மிச்சம் கிச்சம் புடிச்சி கொழந்தையெ படிக்கவைக்கலாமுன்னு ரெம்ப ஆசை, ஒன்னும் முடியாம கவலெ பட்டுகிட்டேட் கிடக்குரேனுங்க."

இங்கே இரண்டு நிமிஷம் நிறுத்தி ஏதோ யோசனையிலாழ்ந்தாள் அப்பக்காரி, "இப்படி எவ்வளவு காலத்திற்கு உன் ஜீவியம் நடக்கமுடியும்?..........." என்று நான் இழுத்ததும் மறுபடியும் அவள் ஆரம்பித்து வார்த்தைகள் சிந்தனையில் தோய்ந்து வந்தன. இப்புடியே கையெ கசக்கி சாப்புட்டுக்கிட்டு இருக்கிறது, எவ்வளவு நல்லது, நீங்களே சொல்லுங்கங்க, கொழந்தையை படிக்கவக்கிறதில் என் ஆசையை கைகூடவக்க உங்கமாதிரி கனவாங்கள் தயவு வச்சா முடியுமுங்க. எல்லாத்துக்கும் அல்லாஹ் போதுமுண்டு நினெச்சிதான் இருக்கிறேன். நேரமாவுதுங்க நான் போய் வருகிறேன்," என்று விடை கேட்டாள். "சரி, உன் பெயர் கூறவில்லையே, என்றேன்." என் பேரு சுலேகா, என்றாள். 'சுலேகா' என்று என் நாவு அசைந்தது. மறுநாள் மாலையில் "அப்பக்காசு" என்ற குரல் கேட்டு வாயல் பக்கம் கண்களைத் திருப்பினேன். அவளுடைய சிறு பெண்ணும்கூட நிற்பதைக்கண்ட என் மனம் இரக்கங் கொண்டது. "இந்தா! குழந்தையை படிக்க அனுப்பு, ஸ்கூல் பீஸ் நான் கொடுக்கிறேன்." என்ற என் ஆறுதலான வார்த்தையைக் கேட்ட அவள் முகத்தில் ஆனந்த ரேகைகள் படர்ந்ததைக் கண்டேன்.

ஏழையர் உள்ளம் குளிரும்

V. நூர்முகம்மது

★

பாரதநாடு பாகிஸ்தான் செய்யப்பட்டால்:—நாடு நலனடையுமா? அயல் நாடுகளின் உறவு அழகுற நடை பெறுமா? பிறநாட்டுப் படையெடுப்பு பீதி அகலுமா? பண்டமாற்றுப் பரிவர்த்தனை பாதிக்கப்படமாட்டாதா? என்று எத்தனையோ கேள்விகள் எழுந்ததுண்டு.

எதிர்க் கட்சினர் எழுப்பிய அத்தனை கேள்விகளுக்கும் அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர்களும், அனுதாபிகளும் விளக்கத்துடன் விடையளித்துள்ளனர்.

பிறகு:—பாக்கிஸ்தான் நாடுகளேனும் பாதிக்கப் படாமலிருக்குமா? தனித்து நிற்கும் சக்தியுண்டா? பொருளாதார வசதிகள் போதுமான அளவில் உண்டா? என்ற கேள்விகள் எழுந்தன.

* * * *

பாதிக்கப்படுமோ? என்ற பயம் விடுதலை வேட்கும் வீரனுக்கிருத்தல் கூடாது. தரணி முழுவதையும் உற்றுப்பார்! தனித்து நிற்கும் சக்தியுடைய நாடுகளை அறிந்துகொள். நிலப்பரப்பு, ஜனப்பெருக்கு நாட்டின் இயற்கைவளம் இவற்றையெல்லாம் கவனித்துச் சொல்! சுவீடன்—நார்வே சுவிட்ஜர்லாந்து இவைகள் தனித்து நிற்பது சாத்யப்படும் பொழுது—பாக்கிஸ்தான் தனித்து நிற்கமுடியாதா? என்பதைக் கூறு என்ற பதில்களை சாதாரணத் தொண்டனும் அளித்ததுண்டு.

பொருளாதார வசதி போதுமான அளவில் உண்டா என்ற கேள்விக்கு இதோ பதில்:— நாட்டின் இயற்கை அமைப்பை நன்கு கவனித்து மக்கள் உழைப்பை உருவகப் படுத்தி உற்பத்தியைப் பெருககி ஆட்சி முறையையும் அழகுற நடத்தினுல் செல்வ நிலே சீரடையாது என்ன செய்யும்.

தேசத்தின் பொருள் வளம் தேசத்தை ஆட்சிசெய்யும் அறிஞர்களின் திறமையைப் பொருத்திருக்கிறது—ஆட்சி செய்யும் அரசியல் கட்சிகளின் அடிப்படைக் கொள்கைகளைப் பொருத்து இருக்கிறது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி—தாழ் நிலையைப் போக்கவேண்டும் என்ற குறிக்கோள் ஒன்றே கொண்டிருக்கும் அரசியல் கட்சியினரால் அல்லாது மற்றவர்களால் நாட்டிற்கு நலம் பயக்கும் பொருளமைப்பு காண முடியாது.

சமுதாயத்தின் தனிப்பெருங் கூட்டமாகிய வறியவர் தலையில் வரிச்சுமையை அடுக்கடுக்காக அடுக்கி அமுக்கி விட்டு, உண்டுகொழுக்கும் ஊனர்களுக்கும்—கள்ள மார்க்கெட் கயவர்கட்கும்—கொள்ளை லாபக் கொலைஞர்கட்கும் சாதகமான சட்டங்கள் அமைத்தால் செல்வ நிலை சீரடைதல் சிரம சாத்தியம்தான்!

மார்வாடியும்—குஜராத்தியும்—டால்மியாவும்—பஜாஜும்—டாடாவும்—பிர்லாவும் வாழ்வதற்காக மற்றெந்த மாகாணமோ மாகாண மக்களோ மாள்வதாயினும் கவலையில்லை என்ற கரடிப் போக்கில் இருக்கும் எந்த அரசியல் கட்சியினுலும் நாட்டிற்கான பொருளமைப்புத் திட்டம் நல்கமுடியாது.

இன்று மக்கள் அனைவரும் மகிழ்ந்து வரவேற்கும் பொருள் அமைப்பு மசோதாவை நிதி மந்திரி ஜனாப் லியாக்கத் அலிகான் கொண்டுவந்துள்ளார் என்றால் அகில இந்திய முஸ்லிம் லீகின் அமைச்சர் என்ற முறையில் எவ்வித நேர்மையான நிதி மசோதாவைக் கொண்டுவர முடியுமோ அதைக் கொண்டு வந்துள்ளார் என்ற நியதியைத்தான் காட்டுகிறது.

நாளை பாக்கிஸ்தான் நாடுகளில் ஏழையர் உள்ளம் குளிரும் வகையில் எவ்விதக் காரியங்கள் செய்ய இருக்கிறோம் என்பதற்கு எடுத்துக் காட்டுத்தான் இந்த நிதி மசோதா? இன்று இந்த நிதி மசோதாவை பொருளாதாரத்திலே பொதுஉடைமைக் கொள்கையில் இருக்கும் ரஷ்யா அதிகார தோரணையிலே அரசாங்க அறிக்கையிலே பாராட்டியிருக்கிறது என்றால் அது ஆச்சரியப்படும் விஷயமல்ல.

தன்னை இஸ்லாமியன் என்று உணர்ந்த ஒருவன் எவ்விதமாக பொருளாதார மசோதாத் தயாரிக்கமுடியுமோ— முஸ்லிம்களுக்காக – முஸ்லிம்களாலே ஆளப்படவிருக்கும் ஒரு குடியரசின் நிதி மந்திரி எவ்வாறு பட்ஜெட்டைத் தயாரிக்க முடியுமோ? அதைச் செய்தார் என்றுதான் அர்த்தம்.

திருக்குர்ஆனின் தத்துவப்படியான உண்மை இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்துவதற்கிருக்கிறோம் என்று இந்த நிதி மசோதா மூலம் அகில இந்திய முஸ்லிம் லீக், உலகிற்கு ஒரு பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறது.

Printed at the Bharathmata Press, 39, Anderson Street, G. T. Madras.
for Najma Publishing House, Pudukkottai. L. Dis. 8754. 3-47—1000

புதிய நூல்கள்

பாகிஸ்தான் பகற் கனவா ?

பாகிஸ்தான் பகற்கனவு அல்ல. அதுபத்துக் கோடி முஸ்லீம்மக்களின் உரிமை. அதையடைந்தே தீருவோம் என்ற திட நம்பிக்கையை வீரம் செறிந்த உயர்ந்த நடையில் அதிராம பட்டணம் க. மு. முஹமத் ஹனீப் அவர்கள் எழுதியுள்ளார் கள். இரண்டாம் பதிப்பு. 52 பக்கங்கள்.

விலை 0 8 0

புரட்சிக் கவிஞர்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கவிதை நலன்களைப் பாரட்டி தமிழ்நாட்டு அறிஞர் பலரின் கட்டுரைகள் பாராட்டுரைகள் கொண்ட சிறந்த நூல். திரு. வி. க. நாவலர் சோமசுந்தர பாரதியார், கல்கி, C. N. A. முதலியோர் எழுதியுள்ளனர். இரண்டாம் பதிப்பு.

விலை. 2 0 0

கருஞ்சட்டைப் படை

திராவிட இன எழுச்சியின் சின்னமாக விளங்கும் "கருஞ்சட்டைப்படை"யைப்பற்றிக்கூறுகிறது. ஆசிரியர் : செல்வம்.

விலை 0 3 0

கிடைக்குமிடம் :—

பாரி நிலையம்.

59, பிராட்வே : : சென்னை. 1.

The New Era Printers, Madras-1.

303
2-74



கைக்குட்டைகள்

ஒவ்வொரு கைலியிலும், கைக்குட்டைகளிலும்

சங்குமுத்திரை
CHANK BRAND

இந்த முத்திரை உத்திரவாதம்

முகம்மது அபூபக்கர் & கோ

84. கீழவெளி வீதி—மதுரை
தலைமை ஆபீஸ்—மதராஸ்